விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

*சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 17 சனிக்கிழமை (29.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 72*

# சர்வதேச பொறிமுறையை இலங்கைக்கு ஏற்படுத்துக

## ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் சர்வதேச அமைப்புக்கள் கூட்டாக வேண்டுகோள்

**(கொழும்பு)**

**இலங்கை குறித்து சர்வதேச பொறிமுறையொன்றை ஏற்படுத்துமாறு 8 மனித உரிமை அமைப்புகள் ஐக்கிய நாடுக்ளின் மனித உரிமை ஆணையாளரை கேட்டுக் கொண்டுள்ளன.**

**மனித உரிமை கண்காணிப்பகம், மன்னிப்புச்சபை உட்பட எட்டு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கு கூட்டாக எழுதியுள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.**

இலங்கையில் மனித உரிமை விடயத்தில் குறிப்பிடத்தக்க பின்னோக்கிய நகர்வுகள் இடம்பெறுகின்றன என்பதற்கான அறிகுறிகள் குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம் என எட்டு மனித உரிமை அமைப்புகளும் தெரிவித்துள்ளன. ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து விலகுவதாக அரசாங்கம் ஆற்றியுள்ள உரை இதனை உறுதி செய்வது போல காணப்படுகின்றது என அந்த அமைப்புகள் தெரிவித்துள்ளன. அரசமைப்பின் 19வது திருத்தத்தை மாற்றும் இலங்கை அர 23

### இணக்கப்பாடின்றி
## ஐ.தே.க. செயற்குழுக் கூட்டம் நிறைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கூடிய நிலையில் எந்தவித இணக்கப்பாடும் இன்றி முடிவடைந்துள்ளது.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வெள் 23

### ஈரான் பாராளுமன்றம்
## கொரோனாவால் மூடப்பட்டது

(தெஹ்ரான்)

உலகை அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் பரவல் தற்போது சீனாவைத் தாண்டி பல நாடுகளில் வேகமாகப் பரவி வருகின்றது.

இதன்படி, ஈரானில் அதன் தாக்கம் அதிகரித்துள்ள நிலை 04

### இலங்கையின் பொறுப்புக் கூறல்
## ஐ.நா.பாதுகாப்பு சபைக்கு பாரப்படுத்தப்பட வேண்டும்
### ஜெனிவாவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

உள்ளக விசாரணை பொறிமுறையானது கலப்பு என்று பொய் கூறி தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றியே விற்கப்பட்டது. காலம் தாழ்த்தாது இலங்கையின் பொறுப்புக் கூறல் விவகாரம் ஐ.நா பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்தப் 23

## இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அரசின் செயற்பாடுகள்
### பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார



(கொழும்பு)

நாட்டில் இராணுவ ஆட்சியினை ஏற்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, சேவை தொடர்பில் பாதுகாப்பு தரப்பினருக்கிடையில் முரண்பாட்டினைத்தோற்றுவிக்க அரசாங்கம் முற்படு 23

## வவுனியாவில் இளைஞன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்கிணற்றிலிருந்து நேற்றுக்காலை இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஓமந்தை 23

## ஆர்ப்பாட்டத்தை சமாளிப்பதிலேயே தனது நேரம் விரயமாகின்றது
### ஜனாதிபதி கோட்டாபய கவலை



(கொழும்பு)

ஆர்ப்பாட்டக்காரர்களை சமாளிப்பதிலேயே தனது நேரங்கள் விரயமாவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 23

### கால அவகாசத்துடன் செயற்பட தயார்
## ஐ.நாவுடன் இணைந்து அமைதி நல்லிணக்கம் ஏற்படுத்தலாம்
### ஜெனிவாவில் தினேஷ் குணவர்தன

(ஜெனிவா)

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருடன் இணைந்து நிலையான அபிவிருத்தி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை தயாராகவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஜெனிவாவில் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கைக்கு கால அவகாசம் தேவை 04

### 3 வயது பாலகன்
## புற்றுநோயால் உயிரிழப்பு

(கரணவாய்)

புற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்த 3 வயது பாலகன் ஒருவன் உயிரிழந்துள்ளான். புலோலியைச்சேர்ந்த பிரகீதன் 04

## ஐ.நாவின் ஒருமித்த கருத்தை உதாசீனம் செய்ததற்கு இலங்கை மீது சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்
### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் கடிதம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் ஒருமித்த கருத்தை உதாசீனம் செய்யும் இலங்கை அரசின் மீது சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதியரசர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 04

### ஐ.நாவிலிருந்து இலங்கை விலகல்
## உலகநாடுகளின் முடிவுகள் கேள்விக்குள்ளாகியுள்ளது
### ஜெனிவாவில் சிறீதரன் எம்.பி

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் பிரேரணையில் இருந்து இலங்கை விலகிக்கொள்வதாகத் தீர்மானித்திருப்பது, உலக நாடுகளால் கொண்டுவரப்படும் முடிவுகளை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடு என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார். 23

### வயலுக்கு பயன்படுத்தும் கிருமிநாசினியை
## மதுபானம் என நினைத்து அருந்திய முதியவர் மரணம்
### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிருமிநாசினியை மதுபானம் என நினைத்து அருந்திய முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி நெல்வயலுக்கு பயன்படுத்தும் கிருமி நாசினியை மது 23

## இலங்கை அரசாங்கத்திடம்
# ஐரோப்பிய ஒன்றியம் ஜெனிவாவில் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கையில் தேர்தல் ஒன்று நடத்தப் படும் நிலையில் இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் போர்க்குற்றம் தொடர்பான விடயங்களில் கடும்போக்கை விட்டுக்கொடுத் தல் , காணாமல்போனோர் விடயத்தில் நீதி. குடியியல் சமூகத்தின் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம் என்பவற்றை பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் யோசனையின் இணை அனுசரணையில் இருந்து இலங்கை விலகிக்கொண்டமையை அடுத்தே இந்த கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்தினம் ஜெனிவாவில் விடுத்துள்ளது

2015ஆம் ஆண்டு முதல் மனித உரிமை விடயங்களில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றம் கண்டு வந்தமையையும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில் இலங்கை தொடர்ந்தும் சர்வதேச பங்காளி களுடன் இணைந்து செயற்படுமானால் தாமும் இலங்கைக்கு உதவி யளிக்க முடியும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை மரண தண்டனை நிறை வேற்று யோசனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது. (ம)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## விற்பனைக்கு

Toyoto Towance cr27 Lotto model van (1995 Model) White Colour, four door, flot roof 254xxx விற்பனைக்கு (2421)

தொடர்பு:- 076 963 5621

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **கிருஷ்ணபிள்ளை**
**சிவபாக்கியம்**

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் அம்பிகையின் புகழ்பாடும் சிறப்புப் பெற்ற கந்தபுராண விற்பன்னர் திரு.**கி.விநாயகமூர்த்தி** அவர்களது பாசமிகு தாயாரும் ஆலய பரிபாலனசபை செயலாளர், அம்பிகையின் முழுநேர அடியவன் திரு.க.சிவபாதசுந்தரம் அவர்களது மாமியுமான அமரர் திருமதி **கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம்** அவர்கள் 27.02.2020 அன்று காலமான செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்
**ஆலய பரிபாலன சபையினர்**

(C-9366)

## கண்ணீர் அஞ்சலி



யா/நீர்வேலி இ.த.க.பாடசாலை அதிபர்
திரு.**க.கௌரிகாசன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **கமலாகரன் சந்திராதேவி**

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்கள் சங்கமும், கோட்டக்கல்விப் பணிப்பாளரும்**
**கோப்பாய்க் கல்விக் கோட்டம்**

(2420)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திராதேவி கமலாகரன்



பிறப்பு: 1951.07.12 இறப்பு:2020.02.27

வதிரி சிவானந்த பவனத்தை பிறப்பிடமாகவும் கமலவாசத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சந்திராதேவி கமலாகரன் 27.02.2020 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கார்த்திகேசு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி கந்தவனம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கமலாகரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலேஸ்வரியின் அன்பு மைத்துனியும் குலசேகரத்தின் உடன்பிறவா சகோதரியும் முத்தரசி (ஆசிரியை - வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), கௌரிஹாசன் (அதிபர் - நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை), சந்திரகாசன் (மேற்பார்வையாளர் - CRISBRO), எழிலரசி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சோமசங்கர், சர்மிளா (ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சசி, சுஜேந்திரசீலன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரவிக்கிருஸ்ணா, கிருத்திக்றோஷன், தர்சாயினி, அக்ஷயன், ஆர்த்திகன், அக்ஷயா, சியாமினி, ஜஸ்வின், நிதுன், அவனிக்கா ஆகியோரின் பேர்த்தியும் அமரர் Dr.சிவானந்தன் மற்றும் Dr.பேரானந்தன், அமரர் இந்திராதேவி மற்றும் புஸ்பராணி (ஒய்வுநிலை ஆசிரியர்), சிவராணி, தேன்மதி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுசீலா - சிவானந்தன், அமரர் கலைச்செல்வி - பேரானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வதிரி "கமலவாசம்" முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்குவம்பிடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

"கமலவாசம்"
அல்வாய் தெற்கு, வதிரி.

(C-9369)

தகவல்:
குடும்பத்தினர்

## கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரி ஆசிரியர் திரு.செல்வகுமார் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
**பொன்னையா**
**இராசதுரை**

(முன்னாள் இ.போ.ச நடத்துநர்)



அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

துயரில் பங்குகொள்ளும்
**ஆசிரியர் கழகம்**
**(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)**

(C-9364)

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

## ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- காயகல்ப்பப்பயிற்சி
- எளியமுறை தியானங்கள் கற்றுத்தரப்படவிருக்கின்றன

பயிற்சிகளை வழங்குவதற்கு **தமிழ்நாட்டின் தலைசிறந்த பேராசிரியர்களில் ஒருவரான பேராசிரியை அருள்நிதி லில்லிபாய் அவர்கள் வரவழைக்கப்படுகிறார்கள்.** எனவே இவ் அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் அறியத் தருகின்றோம்

காலம் :29.02.2020 சனிக்கிழமை தொடக்கம் 06.03.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
பயிற்சிகளை வழங்குபவர்கள் : மனவளக்கலை பேராசிரியை அருள்நிதி லில்லிபாய்
துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்

அகத்தாய்வு 3ம் நிலை 29.02.2020 சனி மற்றும் 01.03.2020 ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்**
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 0212222772

(C-9365)

# மகிந்த மைதானத்தில் ரசிகர்கள் மீது ராணுவத்தினர் வெறியாட்டம்!

## உடன் விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

**அம்பாந்தோட்டையில் கிரிக்கெட் ரசிகர்கள் மீது ராணுவத்தினர் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதல் குறித்து உடன் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.**

இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் போது குழப்ப நிலை ஏற்பட்டது.

சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் இடம்பெற்ற போட்டியின் போது டிக்கெட் பெற்றுக் கொள்ளும் இடத்தில் குழப்ப நிலை ஒன்று ஏற்பட்டது.

இதன்போது இராணுவத்தினர், இலங்கை அணி ரசிகர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

அதற்கமைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் விளையாட்டுத்துறைத் அமைச்சர் டளஸ் அழகப்பெருமவை தொடர்பு கொண்டு, உடனடி விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டனர். இத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பான அறிக்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளது. (இ-7)

## அரச சேவையென்பது வேலைவாய்ப்பு அல்ல அது மக்களுக்கான சேவையே - ஜனாதிபதி

(கொழும்பு)

அரசசேவையென்பது வேலைவாய்ப்பு அல்ல எனவும் அது மக்களுக்கான சேவையே என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய அரசாங்க நிறுவனங்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நாடாளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்திய 110 அரசாங்க நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சபாநாயகர் கருஜெய சூரிய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய, "ஒவ்வொரு நாளும் சம்பள உயர்வு, பதவி உயர்வு கோரி பல்வேறு விதமான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய கோரிக்கைகள் அனைத்துக்கும் எம்மால் தீர்வை முன்வைக்க முடியும். அது எப்போதென்றால் அரச வருவாயை அதிகரிப்பதன் ஊடாகவேயாகும்.

அத்துடன் அரச வருவாயை அதிகரிப்பதைப்போன்று கழிவுகளை குறைத்தல் மற்றும் ஊழலை ஒழித்தல் ஆகியவற்றையும் பொதுச் சேவையின் ஊடாகவே செயற்படுத்த முடியும்.

மேலும் தற்போதுள்ள நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுச் சேவையை திறம்பட செய்ய தேவையான அனைத்து



நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எனவே சுயாதீன ஆணைக்குழுக்களில் மற்றும் அரச சேவைகளில் ஈடுபடும் அதிகாரிகள் சுயாதீனமாக செயற்பட வேண்டும்" அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பல்கலை.சி.சி.ரி.வி. விவகாரம் நான்கு பேருக்கு விளக்கமறியல்

(களனி)

களனி பல்கலைக்கழகத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி.கமராக்களை கழற்றிய விவகாரத்தில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த சந்தேகநபர்களை எதிர்வரும் மார்ச் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

குறித்த 4 பேரில் பௌத்த பிக்கு மாணவர் ஒருவரும் அடங்குவதாக தகவல் வெளியானது.

களனி பல்கலைக்கழக சி.சி.ரி.வி. கழற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக மாணவர் சங்கத்தின் தலைவர் உட்பட 16 பேர் கிரிபத்கொடை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அதில் 12 பேர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் மிகுதி நான்கு பேரும் மஹர நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, களனி பல்கலைக்கழக சி.சி.ரி.வி.கழற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக இனங்காணப்பட்ட 25 மாணவர்களுக்கு இரண்டு வருடங்கள் வகுப்புத் தடை விதிக்கப்பட்டதாக களனி பல்கலைக்கழக தொடர்பாடல் மற்றும் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## ஜனாதிபதியைச் சந்தித்து நன்றி கூறிய சீனத்தூதுவர்



(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவரின் பதவிக்காலம் முடிவடைந்தமையால் செங்யுவான் ஆன் இலங்கையில் இருந்து சீனாவிற்கு செல்வதற்கு முன் நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் சீனாவின் தூதுவராகக் கடமையாற்றக் கிடைத்தமை, தனக்கு கிடைத்த கௌரவமாகும் என சீனத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

தனது பதவிக்காலம் நிறைவடைந்து இலங்கையில் இருந்து விடைபெற்றுச்செல்லும் முன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தனது பதவிக்காலத்தில் மறக்க முடியாத பல நினைவுகள் காணப்படுவதாக குறிப்பிட்ட தூதுவர், தனது புதிய பதவியிலும் இலங்கைக்கு தன்னாலான அனைத்துவித உதவிகளையும் செய்வதாக தெரிவித்தார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட சீனாவுக்கு வழங்கிய ஆதரவுக்காக இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார். (ஜ)

## சர்வதேச நீதி விசாரணைகள் மூலமே பொறுப்புக்கூறலை நிலைநாட்ட முடியும்

### யோகேஸ்வரன் வலியுறுத்து

(கொக்கட்டிச்சோலை)

சர்வதேச நீதிப் பொறிமுறையின் மூலமே பொறுப்புக்கூறலையோ, உண்மையைக் கண்டறிதலையோ இந்த மண்ணில் ஏற்படுத்தமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய ஆட்சிக் காலத்தில் அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்றன. கடந்த 2015 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் நாங்கள் சோதனைகளுக்கு உட்படுவது மிகவும் குறைவாகவே இருந்தது. இன்று வடகிழக்கில் பல இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் பல செயற்பாடுகள் வரவிருக்கின்றன.

முன்பு சிவில் பகுதிகளுக்கு இராணுவத்தை நியமிக்கும் நிலைமைகள் இருக்கவில்லை. தற்போது உயர் நிலைகளில் உள்ள சிவில் பகுதிகளுக்கெல்லாம் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றார்கள். கோட்டாபயவின் ஆட்சியில் இவை வந்து விட்டன. இன்னும் பல செயற்பாடுகள் வரலாம். இது தொடர்பாக நாங்கள் அவதானமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது.

ஜெனிவாவில் சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை தற்போதைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்,நிராகரிக்கின்றோம் எனக் கூறியுள்ளது.

அவர்கள் உள்ளகப் பொறிமுறையிலான விசாரணைக்குத் தயார் என்றும் கூறியுள்ளனர். அதனை நாங்கள் எந்த வகையில் நம்பமுடியும்?

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தனக்கு பிரதம நீதியரசர் ஆதரவு வழங்கவில்லையென்பதற்காக அவரை பதவி நீக்கிய செயற்பாட்டினை நாங்கள் கண்டோம். அவ்வாறான செயற்பாடு தற்போதும் நடைபெறாது என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நீதியை எந்தவகையில் நிலைநாட்டமுடியும் என்ற கேள்வியும் உள்ளது.

உள்ளக பொறிமுறைமூலம் எங்களுக்குத் தீர்வு கிடைக்காது. அவ்வாறு நீதித்துறை சரியான முறையில் கஷ்டப்பட்டு செயற்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கினாலும் பொது மன்னிப்பு என்ற ரீதியில் இராணுவ அதிகாரிகள், விடுதலையாகின்றனர்.

கோட்டாபய ஆட்சிக்கு வந்ததும் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளும் யாருக்கும் தெரியாது இரகசியமான முறையில் விடுதலை செய்யப்பட்டனர்.

எனவே, சர்வதேச நீதி விசாரணைகள் மூலமே பொறுப்புக்கூறலையோ நீதி நிலைநாட்டலையோ, உண்மையைக் கண்டறிதலையோ இந்த மண்ணில் ஏற்படுத்த முடியும். தமிழ் மக்களை பௌத்த தீவிரவாதம் மூலம் அடக்கும் முயற்சியாகவே பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகாஜனா-ஸ்கந்தவரோதயா மோதும் வீரர்களின் போர் துடுப்பாட்ட போட்டி

## பலமான நிலையில் மகாஜனா



வீரர்களின் போர் துடுப்பாட்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி 313/09 என்ற வலுவான ஓட்ட எண்ணிக்கையை எட்டி ஆட்டத்தை இடைநிறுத்திக்கொள்ள, தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி68/04 என்ற நிலையில் முதலாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்துள்ளது. இன்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஸ்கந்தா முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்ய, மகாஜனா முதலில் துடுப்பெடுத்தாடியது. அணித் தலைவர் கிருஷனுடன் தனிஸ்ரன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். கிருஷன் 02 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தனிஸ்ரன் நிதானமாக மதீசனுடன் இணைந்து ஓட்டங்களை பெற்றுக்கொண்டிருந்தார். மதியபோசன இடைவேளையின் போது 132/01 என்ற நிலையில் மகாஜனா பலமானநிலையில் இருந்தது. அப்போது தனிஸ்ரன் 75 ஓட்டங்களுடனும் மதீசன் 41 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

மதியபோசனத்தின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியதும் தனிஸ்ரன் வந்த வேகத்தில் சென்றார். நிதானமாக ஆடிய மதீசன் 49 ஓட்டங்களுடன் அரைச்சதத்தை தவறவிட்டு வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய வரலக்ஷன் நிதானமாக ஆடி 51



ஓட்டங்களை பெற்று வெளியேறினார். சிலக்ஷன் 46 ஓட்டங்களுடன் அரைச்சதம் பெறும் வாய்ப்பை தவறவிட்டு ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சயந்தன் 31 ஓட்டங்களுடன் வெளியேறினார். 69.1 ஓவர்கள் நிறைவில் 313/09 ஓட்டங்கள் என்ற நிலையில் மகாஜனா ஆட்டத்தை நிறுத்தியது.

ஸகந்தா சார்பில் பந்துவீச்சில் பிரசன், டனுஸ்ராஜ், கௌரிசங்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் ஸ்கந்தா முதலாம்நாள் ஆட்டநேர முடிவில் 16 ஓவர்கள் நிறைவில் 68/04 என்ற நிலையில் உள்ளது. மகாஜனாவின் ஆரம்ப வேகப்பந்துவீச்சாளர் சதுர்ஜன் அபாரமாக பந்துவீசி 04 விக்கெட்டுக்களை சாய்த்து ஸ்கந்தா அணிக்கு நெருக்கடியை கொடுத்துள்ளார். ஸ்கந்தா வீரர் டான்சன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். மற்றும் அமிர்தசரதன் 19 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

இன்று இரண்டாம்நாள் ஆட்டம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. ஸ்கந்தா 06 விக்கெட்டுக்கள் கைவசமிருக்க 245 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. இன்றையதினம் மகாஜனா வேகமாக விக்கெட்டுக்களை வீழ்த்தி ஸகந்தாவை பலோன் நிலைக்கு தள்ளி, தொடர்ந்து ஸ்கந்தா இரண்டாம் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் நிலைக்கு வந்தால் மகாஜனாவின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாகும்.

( ம-105)





## புற்றுநோயால்...

நிக்கொலஸ் (வயது - 3) என்ற பாலகனே உயிரிழந்தவனாவான்.

புற்றுநோயால் பீடிக்கப்பட்டு வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வீட்டில் இருந்த சமயம் வல்வெட்டித்துறையில் உள்ள ஆலயம் ஒன்றில் பிரார்த்தனை செய்வதற்காக சென்றதாகவும் அங்கிருந்த சமயம் நேற்று வெள்ளிக்கிழமை உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அடுத்து வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் அனுமதித்த போது உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது. (ம-60)

## கொரோனாவால்...

யில், அச்சத்துக்கு மத்தியில் ஈரானிய பாராளுமன்றம் தனது பணிகளை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

ஈரானிய சட்டமன்றத் செய்தித் தொடர்பாளரான அசாதுல்லா அப்பாஸி நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதுடன் மேலதிக அறிவிப்பு வரும் வரை 'பாராளுமன்றம் எந்த அமர்வுகளையும் நடத்தாது எனத் தெரிவித்துள்ளார். (ம)

## ஐ.நாவின் ஒருமித்த..

ஐக்கியநாடுகள் மனிதஉரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட40 /1, 34/ 1மற்றும் 30/1 பிரேரணைகளுக்கான இணைஅனுசரணையிலிருந்து இல ங்கை அரசாங்கம் விலகுவதானது வடகிழக்கு தமிழ் மக்களுக்கும் உலகம் பூராகவும் உள்ள மக்களுக்கும் ஏமாற்றத் தைஅளித்துள்ளது. எனினும் இவ்வாறான முடிவு வியப்படையத்தக்கதொன்றல்ல. தொடர் பத்தாண்டுகாலகட்டத்தின் முடிவே ஜெனிவாவில் அமைச்சர் குணவர்தன வெளியிட்டஅறிவிப்பு.

சர்வதேசசமூகத்தினர் முன்னிலையில் தொடர்ந்து பத்தாண்டு காலமாக தனதுகடப்பாடுகளைத் ஏற்று வந்த இலங்கைஅதேதொடர் ஒழுங்குடன் அவற்றிற்கு மதிப்புக் கொடுக்கத் தவறி வந்துள்ளது. உண்மையில் முதல் இரு வருடங்கள் முடிந்துமேலும் காலஅவகாசம் கொடுக்க விழைந்தபோதுஅக்காலகட்டத்தில் எம்முட் சிலர் அமெரிக்க பிரதிநிதியைச்சந்தித்துகடந்த இரு வருடங்களில்கண்கூ டாக முன்னேற்றத்தைக் காணமுடியாத நிலையில் மேலும் காலஅவகாசம் கொடுப்பதுஅவசியமா என்று கேட்டிருந்தோம்.

தன்பாற்பட்ட பல கடப்பாடுகளை நிறைவேற்றாத இலங்கை, போர்க்குற்றங்கள்.மனித இனத்துக்கெதிரானகுற்றங்கள் மற்றும் இனப்படுகொலைசம்பந்தமாகப் பதிலளித்தலுக்கான பொறிமுறையொன்றைஉருவாக்க தொடர்ந்து மறுத்து வந்தமைஅதன் பிழையான செயல்களுள் முக்கியமானதாகக்கருதப்படுகின்றது.

"பிரிவினைப் பயங்கரவாதஞ் சார்பாக 2009 மேமாதம் தொடக்கம் இன்று வரையில் இலங்கையில் ஒரு தோட்டா கூட சுடப்படவில்லை"என்றுபெருமையுடன் கூறிய மதிப்பிற்குரியஅமைச்சர் குணவர்த்தனஅவர்கள் அப்படியாயின் ஏன் 1979ம் ஆண்டு நிறை வேற்றப்பட்டமிகக் கொடூரமானபயங்கரவாத (தற்காலிக)த் தடைச் சட்டத்தை இது வரை.இலங்கை கைவாங்கத்தவறியுள்ளது என்பது பற்றிக்காரணம் கூறத் தவறியுள்ளார்.

"புதிய" கற்றுணர்ந்தபாடங்கள்,மீள் நல்லிணக்க சமரச ஆணைக்குழுக்களைநியமிப்போம் என்று 2010ல் கூறிய கூற்றின் மறு உருவமே 26 புதன்கிழமை உள்ளக விசாரணை ஆணைக் குழுவைநியமிப்போம் என்று ஜெனிவாவில் கூறிய கூற்று. இவ்வாறான உள்ளக விசாரணை ஆணைக் குழுவை அமைப்போம் என்றஇலங்கையின் புதிய கூற்று நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இனிவரும் பத்துவருடங்களில் கூட உண்மையைக் கண்டறிய முன்னேற்றம் எதுவும் ஏற்படாது என்பதே யதார்த்தம். இலங்கையின் இவ்வாறானவாக்குறுதிகள் மதிப்பற்ற வாக்குறுதிகள். காரணம் உண்மையைக் கண்டறியவேண்டும் என்றஎண்ணம் தொடர்ந்து வந்துள்ள சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களுக்கு என்றுமே இருந்ததில்லை.

எனவேஐக்கியநாடுகளின் ஒருமித்த கருத்தைஉதாசீனம் செய்யும் இந்தச் செயற்பாடுசம்பந்தமாகபோதுமானபதில் நடவடிக்கையைசர்வதேசசமூகம் எடுக்க வேண்டும் என்பதே எமது திடமான வேண்டுகோள். தனது உலகளாவிய நியாயாதிக்க அதிகாரத்தைப் பாவிக்க வேண்டியகடப்பாடு தற்போது சர்வதேச சமூகத்தைச் சார்ந்துள்ளது. அதைப் பாவித்து மிகக் கொடூரமான இவ்வாறான குற்றங்களைப் பற்றிஆராயும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் அல்லது அதே மாதிரியானஅதிகாரம் கொண்ட வேறு மன்றங்களின் முன் இலங்கையின் படையணியினரின் பணியாளர்களை நிறுத்த சர்வதேசசமூகமானதுமுன் வர வேண்டும் என்றார்.

(ம)

## ஐ.நாவுடன் இணை...

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 43 வது அமர்வில் தனது வாய்வழி அறிக்கையை வெளியிட்ட ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மைக்கேல் பச்சலின் உரைக்கு, பதிலளிக்கையிலேயே இதனை தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அறிக்கையிலோ அல்லது வேறு எந்த உத்தியோகபூர்வ ஆவணத்திலோ போர்க்குற்றங்கள் அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு எதிரான தனிநபர்கள் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை. இதனால் இலங்கை பாதுகாப்புப் படையின் எந்த வொரு சேவையிலுள்ள அல்லது ஓய்வுபெற்ற அதிகாரியையோ அல்லது பொலிஸாரினரையோ அவருக்குரிய உரிமைகளை பறிப்பது அநீதி என்று அவர் கூறினார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன தனது உரையில், காணாமல் போனவர்கள் (OMP) மற்றும் இழப்பீட்டு அலுவலகம் (OR) போன்ற பாராளுமன்றச் சட்டத்தால் தற்போதுள்ள நல்லிணக்க வழிமுறை நிறுவப்பட்டுள்ளது. அவை தொடர்ந்து இயங்கும்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக, தேவையான விசாரணைகளுக்குப் பிறகு, இறப்புச் சான்றிதழ்கள் அல்லது சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் பிற உதவிகளையும் வழங்குகின்றன" என்று அமைச்சர் கூறினார் (ம)

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு பயணத்தடை

# அமெரிக்காவுடன் ஒப்பந்தம் இல்லை!

# இலங்கை அரசு அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

**அமெரிக்காவின் எம்.சி.சி. எனப்படும் மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில்லை என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது. அமைச்சரவையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்தது.**



நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவும் குறித்த ஒப்பந்தம் அரசியலமைப்புக்கு உட்பட்டதல்ல என்பதையும் கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எனினும் அப்போதைய எதிர்க்கட்சியான தற்போதைய ஆளும் கட்சியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டமையால் தாமதம் ஏற்பட்டது.

எனினும் புதிய அரசாங்கத்தில் எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளமையை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு பழிவாங்கும் நோக்கில் எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை மறுத்துள்ளதாக அரசியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். (இ-7)

---

### கொரோனா வைரஸ் தொடர்பில்

## இலங்கையர்களை அவதானமாக இருக்குமாறு தகவல் தொழில்நுட்பச் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸினை மையமாக வைத்து சைபர் தாக்குதல் மேற்கொள்வதால் மக்களை அவதானமாக இருக்குமாறு இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் எச்சரிக்கை விடுத்தது.

இதன் காரணமாக இலங்கை இணையத்தள பயனாளர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அச்சங்கம் எச்சரிக்கை விடுத்தது.

உலக சுகாதார அமைப்பு COVID-19 வைரஸ் தொடர்பிலான அனைத்துத் தகவல்களையும் இணையத்தள பயனாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வெளியிட்டு வருகின்றது.

இதன் முடிவாக சைபர் தாக்குதல் மேற்கொள்வதற்காக இரகசியமாக தகவல் திருடும் சைபர் குற்றவாளிகள் அதன் ஊடாக பணம் சம்பாதிக்க முயற்சிப்பதாக தெரிய வந்தது.

Covid-19 வைரஸ் தொடர்பில் புதிய தகவல்களை மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தும் வகையில் மின்னஞ்சலில் Microsoft Word அல்லது PDF ஒன்றை அனுப்பி அதில் Emotet எனப்படும் செயலி ஒன்றை கையடக்க தொலைபேசி அல்லது கணனிக்கு செல்லும் வகையில் இந்தக் கும்பல் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

இது தொடர்பில் உலகம் முழுவதும் பலர் முறைப்பாடு செய்துள்ள நிலையில், குறிப்பிடத்தக்க அளவு இலங்கை இணைய பயனாளர்களுக்கும் இந்த மின்னஞ்சல் கிடைத்துள்ளதாக இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்தது.

Covid-19 தொடர்பில் மின்னஞ்சல் தகவல் ஒன்று கிடைத்தால் அதனைத் திறக்க வேண்டாம் எனவும் அதனை அழித்து விடுமாறும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சங்கம் கோரிக்கை விடுத்தது. (இ-7)

---

## வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக உடன் அறிவிக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்குமாறு பிரதி மற்றும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலை அடிப்படையாகக் கொண்டே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும், அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ள வாகனங்கள் மற்றும் அதிகாரிகள் பற்றிய தகவல்களையும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கோரியது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

---

## கலாமன்ற ஸ்தாபகதினம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் ஸ்தாபக தின நிகழ்வு நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கரையரங்கில் கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கணித பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராசா, யாழ். இந்தியத் துணைத்தூதரக உயர் அதிகாரி எம்.கிருஷ்ணமூர்த்திஐயர், வேலணை பிரதேச செயலர் ஏ.சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

---

## இராசி பலன்

**மீனம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பொதுநல ஈடுபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மேடம்:** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உறவினர் ஒத்துழைப்புண்டு.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், தலைமைப் பொறுப்புக்கள் உங்களை நாடி வரலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணத்தால் பலனுண்டு.

**மகரம்:** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், இனிமையான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** எதிர்ப்புக்கள் அகன்று வியாபார விருத்தியேற்படும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், உங்களோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் காண்பீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்:** பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர்கள் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியத்தில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், திருடர் பயமுண்டு, அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| சுக் | சந் | | ராகு |
| சூரி | | | |
| புத | | | |
| சனி, செவ், குரு, கேது | | | |

சந்திராஷ்டமம்: அத்தம்

**29.02.2020**

மாசி 17, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு

பஞ்சமி காலை 7.00 மணிவரை

பரணி பின்னிரவு 4.10 மணிவரை

சுபநேரம் 3.28-4.58 மணிவரை

இராகுகாலம் 9.28-10.58 மணிவரை

சஷ்டி விரதம்

உழைப்பவனுக்கு வெகுமதி

விதைப்பவனுக்கு அறுவடை

வளவன்

## சிறுகதைகள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் தமிழ்தாசனின் சிந்தை மகிழ சிறுகதைகள் நூல் வெளியீடு நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அல்லாரை அரசினர் அ.த.க. வித்தியாசாலையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், கௌரவ விருந்தினர்களாக மீசாலை கிராம உத்தியோகத்தர் என்.கௌரிதரன், மீசாலை சமுர்த்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## குடைச்சாமியின் குருபூசை நாளை


(யாழ்ப்பாணம்)

குடைச்சாமியின் வருடாந்த குருபூசை நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை குடைச்சாமியின் சமாதி அமைந்துள்ள கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். (இ-5)

# யாழ். தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் 'லக்திரிய' விசேட கடன் திட்டம் ஆரம்பம்







(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் லக்திரிய விசேட கடன் திட்டம் நேற்றுக்காலை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியின் முதற்தரக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானங்களைக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் மிகக் குறைந்த வட்டி அறவீட்டுடன் கூடிய கடன் திட்டமாக லக்திரிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கோவித் மற்றும் பிரதான பிராந்தியங்களின் முகாமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். (இ-10)

## தேசிய கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர் பிரிவு, சிறுவர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு (18 வயதிற்கு மேல்) ஆகிய பிரிவுகளின் கீழ் நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் கையெழுத்து, கவிதைப்பாடல், கட்டுரை, பாடல் நயத்தல், நாடகப் பிரதி எழுதுதல், பாடலாக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விபரணம், சிறுகதை, சிறுவர்கதை முதலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஆர்வமுடையவர்கள் 2020.03.25 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களைச் சமர்ப்பித்து மேற்படி போட்டிகளில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ

## விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)


இலங்கை பொலிஸ் உதவிச் சேவை பயிலுநர் உபபொலிஸ் பரிசோதகர் மற்றும் பயிலுநர் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (கதிரியக்க வல்லுநர் / மருந்தாளர் /மின்சார இருதய துடிப்பு தொழில் நுட்பவியலாளர் / பௌதீக சிகிச்சையாளர் / மருத்துவ ஆய்வு, ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை "பணிப்பாளர் / ஆட்சேர்ப்பு பயிலுநர்களின் ஆட்சேர்ப்பு பிரிவு, இலக்கம் 375,முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு-6" என்ற முகவரிக்கு 28.04.2020 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு வர்த்தமானியை பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-2)




# நாகபூஷணி அம்மன் கோவில் மண்டபம் திறப்பு





(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு நாகபூஷணி அம்மன் கோவிலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கோப்பாய்த்தொகுதிக்கான ஊரெழுச்சி திட்ட இணைப்பாளரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் சிபார்சில் ஒரு மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மண்டபத்திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை கோவில் நிர்வாக சபைத்தலைவர் பரதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபை உறுப்பினர் சி.அகீபன் மற்றும் ஊரெழு பகுதிக்கான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் சி.முகுந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் நேசன் எனும் கொடையாளரால் தனிப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட ஆலயத்துக்கான தேர்முட்டியும் திறந்து வைக்கப்பட்டதுடன் விருந்தினர்கள் ஆலய நிர்வாகத்தினரால் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். விருந்தினர்களுடன் ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள், எனப்பலரும் கலந்துகொண்டனர். (இ-7)

## கலைக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஓவியரும் விரிவுரையாளருமான எஸ்.சண்முகராஜாவின் "உயிர்வு" கழிவுப் பொருட்களான கலைக் கண்காட்சி 01.03.2020 முதல் 04.03.2020 வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நான்கு நாட்கள் சாவகச்சேரியிலுள்ள ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தில் நடைபெறவுள்ளது. (இ-10)

## "நோய் தீர்க்கும் சங்கீதம்" நல்லூரில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் மன்றத்தின் "நோய் தீர்க்கும் சங்கீதம்" என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூரிலுள்ள முகாமையாளர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மைப் பேச்சாளராக கனடா மெக்மாஸ்டர் பல்கலைக்கழக குடும்ப மருத்துவ பேராசிரியர், கனடா சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் தலைவர் பேச்சாளர் டாக்டர் வருணன் மகாதேவன் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-2-5)

## 10 நூல்களின் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய காரைக் கவியின் பத்து நூல்களின் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கல்வியியற் கல்லூரியின் பிரதான கலையரங்கில் நடைபெறும்.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சு.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா கல்வியியற் கல்லூரியின் மேனாள் பீடாதிபதி க.பேர்னாட், கௌரவ விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் மேனாள் பீடாதிபதி கலாநிதி.ச.அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வாழ்வகம், நிறுவுநர் ஆ.இரவீந்திரன் மற்றும் எங்கட புத்தகங்கள் நிறுவுநர் திருமதி.கு.வசீகரன் மற்றும் சீர் உயிர் நிறுவுநர் செல்வி ஸ்ராலின் மற்றும் தேசிய விருது வென்ற கவிஞர் காரையூர்க்கவி வா.வடிவழகையன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆண்டு நிறைவு விழா





(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைந்ததையிட்டு, நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் யாழ்.மாவட்ட ஆணையாளர் எஸ். செல்வரஞ்சன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் இசை வாத்தியத்துடன், சென்.ஜோன்ஸ் அம்புலன் மாணவர்களால் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதுடன் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்"க்காக புதிய அறை ஒன்றை யாழ்.மத்திய கல்லூரி வளாகத்தில் அதன் தலைவர் சரத் சமரகே மற்றும் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

கடந்த ஆண்டு சிறந்த முறையில் அம்புலன்ஸ் பாசறையில் பயிற்சி பெற்ற மற்றும் சேவையாற்றிய மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டதுடன் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவருக்கான சின்னமும் சூட்டப்பட்டது. (இ-10-101)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மாணவர் அனுமதி

சுழிபுரம் கந்தகோட்டம் கல்வி நிலையத்தில் புதிய மாணவர்களுக்கான அனுமதிகள் (02.03.2020 இருந்து) இருக்கும் வெற்றிடத்தை நிரப்பல் என்று அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு சலுகை கட்டணத்தில் வழங்கப்படுகிறது.

தரம் 1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

அனுமதிக்கு முந்துங்கள்

பணிப்பாளர்,
கந்தகோட்ட கல்வி நிலையம், சுழிபுரம்.

(2394)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து (சைவபோசனம்)
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்: Diploma in multi media. Audio Visual T.O
எதிர்பார்ப்பு: உத்தியோகம்.
தொ.இ: B/10570

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 35 ¼ செவ் 4 இல்
உயரம்:175cm
தகைமை/தொழில்: B.IT, Bussiness Development Executive,
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10577

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 2
கி.பா: 84 செவ் 8 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:B.Sc.Maintainance Manager
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10572

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: செவ் 6 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உயர்தரம், விற்பனை முகவர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10575

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: 22 ¾ செவ் 5 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.உயர்தரம்
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்.
தொ.இ: G/7284

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 4
கி.பா: செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: H.N.D.E. teacher
எதிர்பார்ப்பு: Engineer, அல்லது தகுந்த வரன்
தொ.இ: G/7287

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 46 செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: M.BA, Quantity Asurance officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/7288

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பா: 27 ½ செவ் 11 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.Sc. Montosary teacher.
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/7289

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# யாழ்.கம்பன் விழா-2020



**பெப்ரவரி 28, 29, மார்ச் 01 ஆகிய திகதிகளில்**

*நல்லூர்*
*காலை 9.30 மணி: கம்பன் கோட்டம்*
*மாலை 4.30 மணி: ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்*



## திருநாள் மங்கலம்

**29.02.2020 சனி காலை 9.30 மணி**

## இன்றைய நிகழ்வுகள்

**மங்கல விளக்கேற்றல்**
கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் தம்பதியர்

**கடவுள் வாழ்த்து**
செல்வன் சி.சிவாம்ஷன்

**தலைமையுரை**
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
(முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர், யாழ்.பல்கலை)

**தொடக்கவுரை**
திரு.ந.சோதிநாதன்
(ஸ்தாபகர், காரை. கிழவன்காடு கலாமன்றம்)

### சுழலும் சொற்போர்

**நடுவர்**
திரு.பாரதி கிருஷ்ணகுமார்

**பொருள்**
"எளிமையின் வடிவாய் நின்று பெரிதும் ஏற்றமுறுபவன்..."

இலக்குவனே!-ந.ஐங்கரன்
குகனே! - ம.கோசலை
சபரியே! - பரா.ரமேஸ்
சடாயுவே! - சி.கேசவன்
அனுமனே! - கு.பாலசண்முகன்

**29.02.2020 சனி மாலை 4.30 மணி**

**மங்கல இசை**
திரு பி.ரஜீந்திரன் குழுவினர்

**மங்கல விளக்கேற்றல்**
திரு சி.வெற்றிவேலாயுதம்
(நிறுவுநர் "வலம்புரி")

**கடவுள் வாழ்த்து**
திரு அ.அமிர்தலோஜனன், அ.அமிர்தசிந்துஜன்

**தலைமையுரை**
சுவாமி சிதாகாசானந்தா
(சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்)

**தொடக்கவுரை**
கௌரவ சி.ஸ்ரீதரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

### பட்டிமண்டபம்

*நடுவர்:* கம்பவாரிதி இ.ஜெயராஜ்
*பொருள்:* "கற்போர் மனதைப் பெரிதும் திகைப்புறச்செய்யும் காவியத்திருப்பம்..."

கைகேயி சூழ்வினையே! – மு.இராமச்சந்திரன் ந.விஜயசுந்தரம்
சீதா அபகரணமே! – பாரதி கிருஷ்ணகுமார் தி.வேல்நம்பி
அக்கினிப் பிரவேசமே! – ஆறு.திருமுருகன் ஸ்ரீ.பிரசாந்தன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–204

# முருங்கையின் மகத்துவம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 217

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எமக்குக் கிடைத்த வரங்களுள் முதன்மையானது எங்களூர் பல்வகைத் தன்மையை தீர்மானிக்கின்ற தாவரங்கள் ஆகும். பயனில்லை என்று எதுவுமில்லை. ஒவ்வொன்றுக்குமான பயன்பாட்டை கண்டுபிடிக்க முடியாத சோம்பேறித்தனம் இது. கழிவையும் பொருளாக்கும் விந்தையை கண்டு பிடித்தால் ஆய்ந்தெடுத்தால் கல்லும் கனியாகும் கழிவும் பவுணாகும். இது முழுக்கமுழுக்க எமக்கான முயற்சியின் போதாமை தான் காரணமேயொழிய வேறெதுவுமில்லை. விலை கூடிய பொருளானாலும் அனைவரையும் கவரத்தக்கதாக, மதிப்புள்ளதாக இருக்கும் வரைக்கும் முத்துக்கும் மதிப்பு. அதுவரைக்கும் அது வெறும் கல்லுத்தான்.

தாவரசங்கமத்தில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் தனித்துவமான பணி உண்டு. அனைத்துக்குமே குறிப்பிட்ட பணி கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனை நாம் இனங்கண்டு கொண்டால் அவற்றை சுலபமாக அந்த காரியத்திற்கே பயன்படுத்திக் கொள்ள முடியும். பயன்பாடு தெரியாதிருக்கும் வரை எமக்கு எதுவுமே பயனற்றதுதான்.

இந்த மனப்பாங்கை நாம் முடிந்தவரையில் மாற்றிக் கொள்ள வேண்டும். ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய தனித்துவத்தை, மரியாதையை நாம் கொடுத்து விட்டால் மாற்றம் எமக்குள்ளே முதலில் ஏற்படும். பின்னர் அது உந்துசக்தியாகி மற்றையவரையும் மாற்றிவிடும். எதிலும் எமது பார்வையின் புரிதல்தான் முக்கியமானது.

எந்தக் கோணத்தில் பார்க்கின்றோம் என்பது இங்கே கவனிக்கத்தக்கது. எதனையும் தேவையற்றது என எண்ணும் தன்மையிலிருந்து நாம் மாற வேண்டும். தேவையற்றதென தெரிகின்ற பொருளை வாங்கிக் குவிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

தாவரங்கள் அனைத்திற்குமே சிறப்புக்களுண்டு. அவற்றை நாம் அலசி ஆராய்ந்து பார்த்தால் இத்தாவர சங்கமத்தில் அவற்றிற்குரிதான இடமொன்று இருந்து கொண்டேயிருக்கும்.

அதனை நாம் இன்னொன்றால் மாற்றியமைத்து விட முடியாது. ஆனால் அவற்றுக்கிணையாக அவற்றின் பயன்பாட்டை நாம் சரிவர புரிந்து கொண்டால் அதனை நாம் மாற்றியமைத்துக் கொள்ளலாம். அதற்கும் எமது புரிதல் இடங்கொடுக்க வேண்டும்.

இத்தாவர இராச்சியத்தில் பல தாவரங்களை நாம் கண்டு கொள்வதேயில்லை. அதற்கு காரணம் அவற்றின் மகத்துவம் எமக்கு தெரியாதிருப்பதுதான். எமக்கென இயற்கை அள்ளித்தந்த தாவரங்கள் பல இருக்கின்றன. அவற்றை நாம் தெரிந்துகொண்டால் குறிப்பாக அவற்றினது வலிமையை, வல்லமையை நாம் அறிந்து கொண்டால் நாம் உடனேயே பயன்படுத்தத் தொங்கி விடுவோம். பல ஊட்டச்சத்துக்களை, இலகுவாகப் பெறக்கூடிய விற்றமின்களை கொண்ட தாவரங்களை நாம் அலட்சியமாக தள்ளி வைக்கக்கூடாது. தாவரங்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள மகத்துவத்தை அறிந்து எமது அன்றாட வாழ்வில் உணவில் அதனை பயன்படுத்த தலைப்பட்டால் எமது சுக ஆரோக்கியத்தை நாம் பேணிக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்ட தாவரங்களுள் குறிப்பிடத்தக்கது முருங்கை. இது கல்யாண முருங்கை மற்றும் கறி முருங்கை என இருவகைப்படும். கல்யாண முருங்கை சிறந்த கால்நடைத்தீவனம். அத்துடன் இந்துக்களின் திருமண வைபவத்தில் இந்திரனை உருவகித்து கல்யாண முருங்கையை கன்னிக்காலாக பாவித்து திருமணம் செய்து வைப்பர்.

மற்றையது கறிமுருங்கை. இதனது காயினை பொதுவாக உணவில் கறிக்கான இடுபொருளாகப் பயன்படுத்துவர். ஆனாலும் இதனது இலையினை கண்டுகொள்வதேயில்லை. கறிமுருங்கையின் இலையில் சிறந்த சத்துக்கள் காணப்படுகின்றன. கிழமைக்கு ஒரு இலைக்கறி வகை என்ற வகையில் முருங்கையிலையினை ஒரு நாளைக்காவது பயன்படுத்தலாம். கறிமுருங்கையிலையில் இரும்புச்சத்து, கல்சியம் இன்னும் பல விற்றமின்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறந்த இலைக்கறி வகையாகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. தினமும் உண்ணும் இலைக்கறி வகைகளுக்குள் முருங்கையினை தெரிந்தெடுத்துக் கொண்டால் அதனது பயன்பாட்டை நாம் முழுமையாகப் பெற்றுக்கொள்ளலாம். முருங்கை மரத்தின் எங்களூர் இனம் தற்போது அழிவடைந்து வருகின்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த ஓராண்டு கறிமுருங்கை சிறப்பாக இங்கே பயிர் செய்யப்படுவதனாலும் அதிலிருந்து பெறப்படும் காய்கள் பசைத்தன்மை அதிகமாக காணப்படுவதனாலும் எங்களூர் இனத்தைத்தேட வேண்டியதாகிவிட்டது. எங்களூர் இனத்தின் உற்பத்தி கணிசமானதாக இருப்பினும் அதனது பூச்சியெதிர்ப்புசக்தி ஒரு காலத்தில் முருங்கையில் வரக்கூடிய பூச்சி பிரச்சினைக்கு எதிர்ப்புள்ள தீர்வாக அமையும் என்பதனால் அதனை நடவு செய்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். முருங்கையை கவனிப்பாரற்ற தாவரமாக கவனத்திற்கொள்ளாது அதற்குரிய அந்தஸ்தைக் கொடுத்துத் தான்பாருங்களேன். தற்போது சந்தையில் முருங்கையின் விலை கிலோவுக்கு 400ஐ தாண்டியிருக்கின்றது.

முருங்கையின் பயன்பாட்டை முழுமையாக பயன்படுத்தினால் எமக்கு பலவகைகளிலும் கிடைக்கக்கூடிய மரக்கறிகளை நாமே வளர்த்து உணவாக்கிக் கொள்ள வழியுண்டு. எம்மை சுக தேகியாக வைத்திருக்கும் இவ்வகை தாவரங்களை நாம் பயன்படுத்துவதோடு பாதுகாக்கவும் வேண்டும்.





நாகர்கோவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்துக்கென இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட கட்டடத்திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாகர் கோயில் மாதர் கிராமச்சங்கத் தலைவி திருமதி சிவசக்தி சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொண்டு மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

(படம்:- மகாலிங்கம்)

# மாலைதீவுக்கான தூதுவராக பாடகரை நியமிக்க பரிந்துரை



(கொழும்பு)

மாலைதீவுக்கான புதிய இலங்கைத் தூதுவராக சிரேஷ்ட பாடகர் ரோஹன பத்தகேவை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்த பரிந்துரைக்கு உயர் பதவிகள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழு அங்கீகாரம் வழங்கியது.

சபாநாயகர் கருஜெயசூரிய தலைமை யில் நேற்றுக் கூடிய உயர் பதவிகள் பற்றிய குழுவின் முன்னிலையில் ரோஹன பத்தகே அழைக்கப்பட்டிருந்தார்.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஜோன் அமரதுங்க, தர்மலிங்கம் சித்தார்த்தன், எரான் விக்கிரமரத்ன மற்றும் எம். ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)


காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

## ஸ்தாபக தின நிகழ்வு

இடம்: கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம்: 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணி

தலைமை:- **திரு.ந.சோதிநாதன்** அவர்கள்
(ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

விருந்தினர்கள்:- **பேராசிரியர் S. ஸ்ரீ சற்குணராசா** அவர்கள்
(கணித பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)

**திரு.ஆ.கிருஷ்ணமூர்த்தி ஐயர்** அவர்கள்
(யாழ்.இந்திய துணைத்தூதரக உயர் அதிகாரி)

காரை **திரு A.சோதிநாதன்** அவர்கள்
(பிரதேச செயலர், பிரதேச செயலகம்,வேலணை)

கலைமாடக்கோன்
**திரு.திருமதி.சிவஞானம் உமாதேவி** தம்பதியினர்
(கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)



நாட்டிய நிகழ்வு
"நிருத்திய வந்தனம்"
நெறியாள்கை
காலகீர்த்தி
ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன் அவர்கள்

சிறப்புப் பட்டிமண்டபம்
"புலம்பெயர் தேசத்து நம் உறவுகள் தமிழர் பண்பாடு கலாசாரத்தை"

| மறந்து விட்டனர்! | | மறக்கவில்லை! |
|---|---|---|
| இன்தமிழ் இனியன் S.S.வாசன் | | வித்தியாரத்னா சி.வரதராஜன் |
| காரை ம.விதுஷன் | | காரை க.விநோதன் |
| ச.நிகேஷ் | நடுவர் | M.A.முருகதாசன் |

நடுவர்: காரை, தமிழருவி த.சிவகுமாரன் அவர்கள்

குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ்.கிளையிலிருந்து பி.ப 2.15 மணிக்கு இல.428 K.K.S வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் கோயில் அருகில்) ஆரம்பமாகும்

(சி-9361)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்-கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்

கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
"சிதம்பரஜோதி"
உயர் விருது பெறுவோர்



சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்



திரு.த.சிவகுமாரன்



திரு.சு.கணபதிப்பிள்ளை



திரு.V.K.பஞ்சமூர்த்தி

மாணவர் கௌரவிப்பு



செல்வன் வி.விதுஷன்
சித்திரப்போட்டி (தேசியமட்டம் 1ம் இடம்)



# மணிவிழா நாயகனிற்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

## திரு. தியாகராசா முருகதாசன்

*(SLTS I, Sc.Trd, Special Maths) (Scout Leader, Phase - IV)*

ஆசிரியர் - யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி

பிறந்த திகதி: - 1960.02.29

முதல் நியமனத் திகதி:- 1990.03.29

ஆரம்பக் கல்வி இடைநிலைக்கல்வி:- யா/புற்றளை மகா வித்தியாலயம் - புலோலி

க.பொ.த உயர்தரம்:- கணிதப்பிரிவு - யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை

உயர்கல்வி:- N.D.T. (மொறட்டுவ பல்கலைக்கழகம் - இலங்கை 1986-1987)



### ஆசிரியர் சேவை விபரம்

யா/ புலோலி மெ.மி.த.க.பாடசாலை
1990.03.29 - 1993.04.05
யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்
1993.04.06 - 1996.03.05
யா/குடத்தனை கரையூர் றோ.க.த.க.பாடசாலை
1996.03.06 - 2001.01.04
யா/மேலைப்புலோலி மெ.மி.த.க.பாடசாலை
2001.01.05 - 2004.01.04
யா/விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி
2004.01.05 - 2012.01.31
யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்
2012.02.01 - 2012.03.14
யா/மருதங்கேணி இ.த.க.பாடசாலை
2012.03.15 - 2014.06.11
யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை
2014.06.12 - 2016.02.11
யா/குடத்தனை கரையூர் றோ.க.த.க பாடசாலை
2016.02.12 - 2018.11.11
யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்
2018.11.12 - 2020.02.28
மொத்த சேவைக்காலம் 29 வருடங்கள் 11 மாதம்

(சி-9856)

ஆண்டுகள் அறுபதாயிங் கொரு ஆசானாய்
மாண்புடன் தான னைத்து மகிழ்வுடன் பணி செய்து
வான் புகழ் கொண்ட பொன்னம் பலம் தன்னில்
வாண்மையுடன் கற்பித்த ஆசானே வாழ்க

அறிவுப் பயணத்தை தொடக்கி வைத்து
அரிய நல் விஞ்ஞானத்தை அருமையாய் புரிய வைத்து
மாணவர் திறமைதனை நன்குணர்த்தி
முன்னேற்றப் பாதையை முறையாக்கிய ஆசானாம் முருகதாஸ்

பணி செய்து ஓய்வுதனை அடைந்தாலும்
பிணி இன்றி நீடு நாள் வாழ்ந்துமே
மனையொடு மக்களும் கூடி மகிழ்ந்தே
மாண்புடனே வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம் வாழ்க.

அன்புடன் வாழ்த்தும்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்.

## துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில்

# ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிலவுகின்ற தொடர் ஆசிரியர் பற்றாக்குறையால் தமது மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாக பின்தங்கிய பிரதேச மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள சுமார் 61 பாடசாலைகளில் அதிகளவான பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகின்றது. குறிப்பாக, துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய கல்விக்கோட்டங்களின் கீழ் உள்ள ஆரம்பப்பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன.

இதேபோல இடைநிலை வகுப்புக்களைக்கொண்ட பாடசாலைகளில் வெற்றிடங்களாக காணப்படுகின்ற அழகியல் பாடங்களுக்கான ஆசிரிய வெற்றிடங்கள், ஆங்கில பாடத்திற்கான ஆசிரிய வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடங்களாகவே காணப்படுகின்றன.

இதேபோன்று உயர்தர வகுப்புக்களைக்கொண்ட பாடசாலைகளில் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள், கணித பாடத்திற்கான வெற்றிடங்கள், வர்த்தகப்பிரிவிற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் காணப்படுகின்றன.

இதனால் பின்தங்கிய கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் இன்றி, பொருளாதார வலு இன்றி வறுமைக்கோட்டின்கீழ் வாழும் தமது மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாதிக்கப்படுவதாகவும் கவலை வெளியிட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் இந்த ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். (9-315)




# கிளிநொச்சியில் 5 பேருக்கு டெங்கு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்தில் ஐந்து பேர் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகிய நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக சுகாதாரத்துறையினர் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த நிலையில் தற்போது குறித்த செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை எனவும் மீண்டும் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (9-100)

# காலாவதியான பானங்களை பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தியுள்ள கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்

(கண்டாவளை)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியிலுள்ள கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் காலாவதியான பழச்சாறு மற்றும் மென் பானங்களை பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள நிலையில் சிறுவர்கள் அதனை உட்கொள்ளும் ஆபாய நிலை காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் அமைந்துள்ள கரைச்சி வடக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கட்டடம் ஒன்றில் காலாவதியான பழச்சாறுகள், சோடா வகைகள் உள்ளிட்ட மென்பானங்கள் பாதுகாப்பற்ற முறையில் கஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு வருகின்றன. அதாவது கடந்த 2015 ஆம் ஆண்டுடன் காலாவதியான பானங்களே இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் காணப்படுகின்றன.



குறித்த கட்டடத்தின் கதவுகள் திறந்த நிலையில் பாதுகாப்பின்றி காணப்படுவதாகவும் இதனால் அந்தப்பிரதேசங்களில் உள்ள சிறுவர்கள் அதனுள் சென்று விளையாடுவதுடன் இவ்வாறான பானங்களை உட்கொள்ளும் அபாய நிலை காணப்படுவதாகவும் இது தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ள னர்.

இதேவேளை கடந்த ஆண்டு முற்பகுதியில் குறித்த கட்டடத்தில் உள்ள பழச்சாறினை உட்கொண்டதால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (9-315)

# பூநகரி குளத்தை அமைப்பதற்கு முதற்கட்டமாக 45 மில்லியன் ஒதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி குளம் அமைப்பதற்குரிய ஆரம்பகட்ட செயலாற்று ஆய்வுகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் மத்திய அரசினால் 45 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக்குளத்தினை அமைப்பதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அதன் பணி கிடப்பில் இருப்பதாக பூநகரிப் பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியிலாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதாவது பூநகரிப் பிரதேசத்தில் ஒரு பாரிய நீர்த்தேக்கம் ஒன்றினை அமைக்கும் வகையில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதாவது கிளிநொச்சி மாவட்டத்தை கடந்து செல்கின்ற மற்றும் அதிக நீர்வரத்தைக் கொண்ட கனகராயன் ஆறு போன்ற பாரிய ஆறுகள் மறிக்கப்பட்டு கிளிநொச்சியின் கிழக்குப் பிரதேசத்தில் இரணைமடுக் குளம், கல்மடுக்குளம் மற்றும் பிரமந்தனாறுக்குளம் கனகாம்பிகைக்குளம் போன்ற பாரிய குளங்கள் அமைந்துள்ளன. இதேபோல கிளிநொச்சியின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள பாரிய நீப்பாசனக்குளமாக அக்கராயன்குளமும் அதற்கு அடுத்தாற்போல் குடமுருட்டிக்குளம் கரியாலை நாகபடுவான்குளம், வன்னேரிக்குளம் போன்ற குளங்கள் அமைந்துள்ளன.

இந்தக்குளங்களுக்கு ஒப்பான பாரிய நீர்த்தேக்கம் ஒன்றினை கிளிநொச்சியின் பூநகரிப்பிரதேசத்தில் அமைக்கலாம் என்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டு இது தொடர்பான ஆய்வுகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு குளங்களை உள்ளடக்கி ஏழு கிலோ மீற்றர் அணைக்கட்டு மூலம் இக்குளம் அமைக்கலாம் என்ற திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

அக்கராயன் ஆற்றுக்கும் மண்டைக்கல்லாற்றிக்கும் இடைப்பட்ட பகுதியில் இக்குளம் அமைவதனால் இவ்விரு ஆறுகளின் ஊடாக வருகின்ற நீர், மற்றும் இக்குளத்தின் மேற்பகுதிகளில் உள்ள பிரதேசங்களில் இருந்து வருகின்ற நீர் என்பவற்றால் இக்குளத்தின் நீர்வரத்து அதிகமாக இருக்கும். இதன் மூலம் பூநகரியில் உள்ள கிட்டத்தட்ட மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் இருபோகங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும் என்பதுடன், இக்குளம் ஆழம் குறைந்த குளமாக இருப்பினும் அதிகளவான நீரேந்துப் பிரதேசமாகவும் அமையும் இக்குளத்தினை அமைப்பதற்கு கிட்டத்தட்ட 750 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி தேவையென்றும் அப்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# தையல் பயிற்சியை பூர்த்தி செய்த 98 பேருக்கு உதவி வழங்கல்



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எருக்கலம்பிட்டி கிராமத்தில் தையல் பயற்சியை பூர்த்தி செய்த 98 பெண்களுக்கு சான்றிதழ் மற்றும் தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

சிறிய, நடுத்தர அளவிலான வியாபாரம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஊடாக பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் எருக்கலம்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 98 பெண்களுக்கு அவர்களின் சுய தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதனடிப்படையிலேயே குறித்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் அஜித் ஜெயவர்த்தன, மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டனர். (9-285)



கிளிநொச்சி மகா வித்தியாலய சாரணிய மாணவர்களினால் சிறப்பாக சாரணியத் தந்தை பேடன் பவலின் நினைவு தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. கிளிநொச்சி மகா வித்தியாலய சாரணிய மாணவர்களினால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர்களான தி.சிவரூபன், நிசாகரன், பாடசாலையின் அதிபர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பேடவன் பவலின் உருவப்படத்திற்கு விருந்தினர்கள், சாரணிய மாணவர்கள், மாணவர்கள் மலர் தூவி வணக்கம் செலுத்தியிருந்தனர். (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)




இயக்கச்சியில் சிவபூமி அபயம் இலவச மருத்துவ சேவை நிலையம் வைத்திய நிபுணர் க.பார்த்தீபன் மற்றும் தொழிலதிபர் பொ.ரஞ்சன் ஆகியோரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

## கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஏற்பாட்டில்

# நந்திக்கடல் வெளியில் மரம் நடுகை





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நந்திக்கடல் வெளிப் பகுதியில் மரம் நடுகை வேலைத்திட்டம் கரைதுறைப் பற்று பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் மஞ்சள் பாலத்துக்கு அண்மையாக நந்திக்கடல் வெளியில் நூற்றுக்கணக்கான மருது மரங்கள் நேற்று நாட்டி வைக்கப் பட்டன. தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையில் கரை துறைப்பற்று பிரதேச சபையால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது .

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கனகேஸ்வரன், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கனகரத்தினம், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தவராசா, முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் சிவநேசன், பிரதேச சபை உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள், பொலிஸார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தனர். (9)




# முத்துஐயன்கட்டு வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு, இடதுகரை மற்றும் வலது கரை ஆகிய பகுதிகளில் சுமார் 15 கிலோமீற்றர் நீளமான வீதிகள் புனரமைக்கப்படாமையினால் இவ்வீதியை பயன்படுத்தும் மக்கள் அன்றாடம் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வீதிகளைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், முதியோர், கர்ப்பவதிகள் எனப்பலரும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே மேற்படி வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு இவ்வீதியைப் பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த வீதிகளை புனரமைத்துத்தருமாறு கடந்த ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வீதியானது நீர்ப்பாசனத்திணைக்களத்திற்கு உட்பட்ட வீதியாகக் காணப்படுவதாகவும் அதற்கான நிதிகள் கிடைக்கும் போது அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)



முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தினால் ஒழுங்கு படுத்தப்பட்ட 2019/2020 கல்வி ஆண்டு மாணவர்களுக்கான "சமுர்த்தி சிப்தொர" கல்விப் புலமைப்பரிசில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ச.கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி.ஜெ.கணேசமூர்த்தி, கோட்டக்கல்வி அதிகாரி சுப்பிரமணியேஸ்வரன், விசுவமடு மகா வித்தியாலய அதிபர் ந.அன்ரன் குலதாஸ், உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபர் ஸ்ரீதரன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:-அக்கராயன் செய்தியாளர்)

# கிளிநொச்சியிலுள்ள எட்டு குளங்களின் கீழ் 19 ஆயிரத்து 907 ஏக்கரில் நெற்செய்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள கல்மடுக்குளம் தவிர்ந்த ஏனைய எட்டுக்குளங்களின்கீழ் 19 ஆயிரத்து 907 ஏக்கர் நெற்செய்கையும் ஆயிரத்து 438 ஏக்கர் நிலப் பரப்பில் உப உணவுச்செய்கையும் மேற்கொள்வதற்கென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நீர்ப் பாசனத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது வரையான பாரிய நீர்ப் பாசனக்குளங்களின் கீழ் காலபோக பயிர்ச்செய்கைகள் அறுவடை நிறைவு பெற்றுள்ள நிலையில் சிறுபோக பயிர்ச்செய்கைகளுக்கான நடவடிக்கைகள் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்மடுக்குளம் தவிர்ந்த ஏனைய குளங்களின் கீழான பயிர்ச்செய்கை தொடர்பான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு பயிர்ச்செய்கைகளுக்கான பண்படுத்தல் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதாவது மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் கீழ் பதினையாயிரத்து 150 ஏக்கர் நெற்செய்கையும் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய செய்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டு அதற்கான கலந்துரையாடல்களும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதேபோன்று அக்கராயன் குளத்தின்கீழ் 2,790 ஏக்கர் நெற் செய்கையும் 248 ஏக்கர் உப உணவுச்செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

குடமுருட்டிக்குளத்தின்கீழ் 400 ஏக்கர் நெற்செய்கையும் வன்னேரிக்குளத்தின் கீழ் 183 ஏக்கர் நெற் செய்கையும் கரியாலை நாகபடுவான் குளத்தின்கீழ் 565 ஏக்கர் நெற்செய்கையும் புதுமுறிப்பு குளத்தின்கீழ் 819 ஏக்கர் நெய்செய்கையும் பிரமந்தனாறுக்குளத்தின் கீழ் 450 ஏக்கர் உப உணவுச்செய்கையும் கனகாம்பிகைக்குளத்தின் கீழ் 240 ஏக்கரும் உள்ளடங்கலாக இதுவரை நடைபெற்ற பயிர்ச் செய்கை கூட்டங்களின் படி பத்தொன்பதாயிரத்து 907 ஏக்கர் நெற்செய்கையும் ஆயிரத்து 438 ஏக்கர் சிறுதானிய செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளதாக நீர்ப் பாசனத்திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கல்மடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டம் மிக விரைவில் நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# விவசாய பணிப்பாளர் இடமாற்றம்

(குருமன்காடு)

விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அ.சகிலா பானுவுக்கு உடனடி இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது. பதில் உத்தியோகத்தர் ஒருவரிடம் கடமை பொறுப்புக்களை கையளித்து விட்டு உடனடியாக பேராதனை விவசாயத் திணைக்களத்தில் கடமையினை பொறுப் பேற்குமாறு விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் 2015 ஆம் ஆண்டு பேராதனை விவசாயத் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளராகப் பொறுப்பேற்று மீண்டும் பேராதனை விவசாயத் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று திருமதி அருந்ததி வேல்சிவானந்தன் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளராக நியமிக் கப்பட்டுள்ளார். (9-250-299)

# இலங்கையை சர்வதேச விசாரணைக்குட்படுத்த அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அமெரிக்க அதிகாரியிடம் தமிழர் மரபுரிமைப் பேரவை எடுத்துரைப்பு

(முல்லைத்தீவு)

இலங்கையிலே இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புக்கள் போன்ற விடயங்களுக்கெதிராக இலங்கையை சர்வதேச விசாரணைக்குட்படுத்த அமெரிக்கா உரிய அழுத்தங்களை வழங்க வேண்டுமென அமெரிக்கத் தூதரக அரசியல்பிரிவு அதிகாரி அன்ரனியிடம் தமிழர் மரபுரிமைப்பேரவை எடுத்துரைத்துள்ளதாக தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரான வி.நவநீதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில், கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தமிழர் மரபுரிமைப் பேரவை அமைப்பினர் மற்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இக் கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மிகக்குறிப்பாக ஆட்சி மாற்றத்தின் பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையிலே இலங்கை கலந்து கொண்டுள்ள சூழ்நிலையிலே தமிழ் மக்களுடைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பிலும் அவருடன் பேசியிருக்கின்றோம்.


அத்துடன் இலங்கையிலே இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான செயற்பாடுகள், போர்க் குற்றங்கள், இன அழிப்புக்கள் போன்ற விடயங்களுக்கெதிராக அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்ற வகையிலே ஒரு சர்வதேச விசாரணையினையை மேற்கொள்வதற்கான அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என்ற செய்தியினை மிகவும் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கின்றோம்.


ஒரு பாதிக்கப்பட்ட இனமாக இருக்கின்ற தமிழர்கள், அமெரிக்கா போன்ற சர்வதேச வல்லரசுகளினுடைய அனுசரணையுடன் தான் எங்களுடைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்த அடிப்படையிலே இலங்கை தொடர்ந்தும் நீதி மீறல்களை அல்லது, நடந்து முடிந்த தவறுகளுக்கு வருத்தங்கூடத் தெரிவிக்காத ஒரு சூழ்நிலையிலே, எந்தத் தவறுகளும் தங்களுடைய அரசாட்சிக் காலத்திலோ அல்லது போர் இடம்பெற்ற காலத்திலோ இடம்பெறவில்லை என மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்ற சூழ்நிலையிலே அமெரிக்கா போன்ற அரசுகள் இலங்கை அரசின் மீது மிகக் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும் என பாதிக்கப் பட்ட மக்கள் சார்பாக நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (9)

# பாரதம்

## இந்தியா - அமெரிக்கா ஆயுத ஒப்பந்தம் சீர்குலைவை ஏற்படுத்தும் - பாக்.சாடல்





(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான ஆயுத கொள்முதல் ஒப்பந்தம் இந்தப் பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்குமென பாகிஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முதன்முறையாக கடந்த 24 ஆம் திகதி, அரசமுறை பயணமாக இந்தியா சென்றார். தனது இரண்டு நாள் சுற்றுப்பயணத்தின் போது ட்ரம்ப், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். தனது பயணத்தின் இறுதி நாளான கடந்த 25 ஆம் திகதி பிரதமர் மோடியுடன் ட்ரம்ப் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இந்தியாவுக்கு 21 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போர் ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட அதிநவீன பாதுகாப்பு உபகரணங்களை வழங்க ஜனாதிபதி ட்ரம்ப் ஒப்புதல் வழங்கினார். இந்த கொள்முதல் தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிலையில் இந்தியா- அமெரிக்கா இடையேயான ஆயுத கொள்முதல் ஒப்பந்தம் பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்கும் என பாகிஸ்தான் குற்றம் சாட்டியது.

இது குறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ஆயிஷா ஃபாரூகி கூறுகையில், "ஏற்கனவே நிலையற்ற தன்மையில் உள்ள பிராந்தியத்தை அமெரிக்கா- இந்தியா இடையேயான இந்த ஒப்பந்தம் மேலும் சீர்குலைத்துவிடும்.

பாகிஸ்தான் மட்டுமல்லாமல் இந்த பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளிடையேயும் மிகவும் ஆக்ரோஷமான தன்மையை பின்பற்றும் இந்தியா குறித்து உலக நாடுகளுக்கு நாங்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## கொரோனா ...

## உயிரிழப்பு 28...


(பீஜிங்)

உயிரிழப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, 2800 ஆக உயர்ந்துள்ளதாக சீனாவின் சுகாதார ஆணையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 82.000 ஆக அதிகரித்துள்ளது.

சீனாவை தவிர்த்து தென்கொரியாவில் தற்போது கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்துக் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,022 ஆக உயர்ந்துள்ளது. அங்கு இதுவரை உயிரிழந்த

## கீழடி 6 ஆம் கட்ட அகழ்வாராய்ச்சியில் அரியவகைப் பொருட்கள் கண்டுபிடிப்பு



(சென்னை)

சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் 6ஆம் கட்ட அகழ்வாராய்ச்சியில் 2 முதுமக்கள் தாழிகள், மண் ஓடுகள் மற்றும் பாசி மணிகள் உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன.

கீழடியில் கடந்த 19 ஆம் திகதி முதல் ஆறாம் கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 122 ஏக்கர் பரப்பில் விரிவான அகழ்வாராய்ச்சி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொந்தகை ஈமக்காடு பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வில் இரண்டு முதுமக்கள் தாழிகளும் ஏராளமான மண் ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இன்னும் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்படவில்லை.

அதேபோல கீழடியில் நடைபெறும் அகழ்வாய்வில் ஏராளமான பாசி மணிகளும் மண்பாண்ட ஓடுகளும் எலும்புத்துண்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த அகழ்வாய்வில் கிடைக்கும் மனித எலும்புகளின் மாதிரியை டி.என்.ஏ.பரிசோதனை செய்து இன மரபியலை அறிந்து அவர்களின் வாழ்வியல் முறை குறித்து அறிய முடியும் எனவும் தொல்லியல் துறை துணை இயக்குநர் சிவானந்தம் தெரிவித்துள்ளார். (ஜ-2)

## சிரியாவின் வான்வழித்தா... 35 துருக்கி இராணுவத்...

(டமாஸ்கஸ்)

ரஷ்ய படைகளுடன் இணைந்து சிரிய உள்நாட்டுப் படைகள் நடத்திய வான்வெளித் தாக்குதலில் துருக்கி இராணுவ வீரர்கள் 35 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப்போர் தற்போது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. குர்திஷ் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்நாட்டின் வடக்குப் பகுதிகளை தற்போது சிரிய அரசுகள் தங்கள் வசம் கைப்பற்றி வருகின்றன.

மேலும், வடக்குப் பகுதியில் உள்ள இட்லிப் மாகாணத்தில் அரசுக்கு எதிராக செயற்பட்டு வரும் போராளிகள் குழுக்கள் மீதும் ரஷ்யா உதவியுடன் சிரியா இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இட்லிப் மாகாணத்தின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள போராளிகள் குழுக்களுக்கு துருக்கி ஆதரவு அளித்து வருகிறது. மேலும், சிரியாவின் எல்லைக்குள் துருக்கி தங்கள் படைகளையும் குவித்து வைத்துள்ளது.

உள்நாட்டில் ஆரம்பமான இப்போர் தற்போது இட்லிப் மாகாணத்தை கைப்பற்றும் நோக்கில் உள்ள துருக்கி-சிரியா ஆகிய இரு நாடுகளுக்கு இடையே போர்ப்பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. துருக்கியின் இந்த நடவடிக்கையால் ரஷ்யா மிகுந்த ஆத்திரம் அடைந்துள்ளது.

இதற்கிடையில், இட்லிப் மாகாணத்தில்

## அமெரிக்கா - தலிபான் அமைதி ஒப்பந்தம் பங்கேற்குமாறு இந்தியாவிற்கு அழைப்பு

(டோகா)

அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே நடைபெறவுள்ள அமைதி ஒப்பந்த கையெழுத்து நிகழ்ச்சியில் இந்தியத் தூதர்களும் பங்கேற்கவுள்ளனர்.

கட்டார் நாட்டின் அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் அந்நாட்டில் உள்ள இந்திய அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். தலிபான்கள் தொடர்பான விவகாரத்தில் இந்தியா நேரடி தொடர்பில் ஈடுபட்டுள்ளது இதுவே முதன்முறையாகும்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாத அமைப்பினர் தங்கள் ஆளுமைக்கு கட்டுப்படாத மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த பயங்கரவாத அமைப்பினரை ஒழிப்பதற்காக ஆப்கானிஸ்தான் அரச படையினருக்கும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டுப்படையினரும் முயற்சித்து வருகின்றனர்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர அந்த நாட்டு அரசின் உதவியோடு தலிபான்களுடன் கடந்த சில மாதங்களாக அமெரிக்கா அமைதிப் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறது.

கட்டார் தலைநகர் டோகாவில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க அதிகாரிகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே சுமுக முடிவு எட்டப்பட்டது. இதன் பயனாக இரு தரப்பினருக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் டோகாவில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட உலகின் பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இந்தியா சார்பில் தூதர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-2)

## கொரோனா கொள்ளை உருவெடுக்கும் சா...

### உலக சுகாதார ஸ்தாபனம் சு...

(ஜெனீவா)

கொரோனா வைரஸ்கொள்ளை நோயாக உருவெடுக்கும் சாத்தியம் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் ஜிப்ரியிஸஸ் தெரிவித்தார்.

கொரோனா கிருமித்தொற்று நாட்டைப் பாதிக்காது என எந்த நாடும் தவறாக எண்ணக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் சூழலில் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

குறிப்பாக, சீனாவுக்கு வெளியே இத்தாலியில் மேலும் 650 பேர் கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.




உலக நாடுகள் கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றினை எதிர் கொள்ளத் தயாராக இல்லை என உலக

# வெளிநாடு

# ா வைரஸ் தொற்று
# 2800 ஆக உயர்வு

பாதிக்
2.000
ாவில்
ாதிப்பு
ப்பட்ட
உயர்
ிழந்த

வர்களின் எண்ணிக்கை 13 ஆக உள்ளது. ஈரானிலும் கொரோனா வைரஸ் காரணமாக 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 26 பேர் உயிரிழந்தனர். ஈரானில் இருந்து சென்றவர்களால் பரவிய நோய் தொற்று காரணமாக டெஹ்ரானில் 23 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ஜ-2)



## த்தாக்குதலில் ுவத்தினர் பலி

ரஷ்யா
க்குதல்
களை
ாராளி
ளித்து
லைக்
குவி
ர் தற்
மற்றும்
ய இரு
த்தை
த நட
திரம்
த்தில்

உள்ள போராளிகள் குழுக்களுக்கு போர் விமானங்களை வீழ்த்தக்கூடிய ஏவுகணைகளை துருக்கி வழங்குவதாகவும் அந்த ஏவுகணைகள் போராளிகளால் தங்கள் போர் விமானங்களை குறிவைத்து ஏவப்படுவதாகவும் ரஷ்யா குற்றம்சாட்டியது. இதனால் ரஷ்யா-துருக்கி இடையே மோதல் நிலவிவருகிறது.

இந்நிலையில், போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இட்லிப் மாகாணத்தின் பாரா மற்றும் பிலியன் நகரங்களில் சிரியா மற்றும் ரஷ்ய கூட்டுப்படைகள் நேற்று அதிரடியாக வான்வெளி தாக்குதல்கள் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் துருக்கி இராணுவ வீரர்கள் 35 பேர் கொல்லப்பட்டனர். (ஜ-2)

## பூமியைச் சுற்றி வரும் குறுங்கோள் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

நிலவைப் போலவே பூமியைச் சுற்றி வரும் மற்றுமொரு கோளினை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

ஒரு கார் அளவே கொண்ட குறித்த குறுங்கோளை அமெரிக்காவின் நாசா உதவியுடன் செயற்படும் காடலினா ஸ்கை சர்வே அமைப்பின் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

'2020 சிடி3' எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த குறுங்கோள், 3 ஆண்டுகளுக்கு முன்னர் புவி வட்டப் பாதையை அடைந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த குறுங்கோள் பூமியை தற்காலிமாகவே சுற்றி வருவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே, '2006 ஆர்ஹெச் 120' என்ற குறுங்கோள் பூமியைச் சுற்றி வரும் நிலையில், தற்போது அதே போன்ற 2 ஆவது குறுங்கோள் கண்டறியப்பட்டுள்ளது. (ஜ-2)

## ளை நோயாக சாத்தியம்


### ம் சுட்டிக்காட்டு



ப்படும்
எதிர்
உலக

சுகாதார நிறுவன அவசரகாலச் சேவையின் இயக்குநர் ரிக் பிரென்னன் தெரிவித்தார். (ஜ-2)

## வெட்டுக்கிளிகளை சமாளிக்க வாத்துக்களை அனுப்பும் சீனா



(பீஜிங்)

பயிர்களை உண்ணும் வெட்டுக்கிளிகளை சமாளிக்க ஒரு இலட்சம் வாத்துகளை பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்கு சீனா தயாராகியுள்ளது.


ஒரு வாத்தானது ஒரு நாளைக்கு 200 இற்கும் மேற்பட்ட வெட்டுக்கிளிகளை சாப்பிடலாம் எனத் தெரிவித்த சீன விவசாய வல்லுநர்கள், வாத்துகளை வைத்து வெட்டுக்கிளிகளை கட்டுப்படுத்தும் செயன்முறையானது பூச்சி கொல்லிகளை விடவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை பயிர்ச்செய்கையில் வெட்டுக்கிளிகளின் தாக்கத்தை குறைப்பதற்கான திட்டங்களை உருவாக்க நிபுணர்கள் குழுவை பாகிஸ்தானுக்கு சீனா அனுப்பவுள்ளதாகவும் இந்த வாரம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பயிர்ச்செய்கையானது கடந்த இரண்டு தசாப்தங்களாக வெட்டுக்கிளிகளின் தாக்கம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கொரோனா வைரஸ் பற்றிய செய்தித் துளிகள் சில...

### 18 தொன் மருந்துகளுடன் இந்திய இராணுவ விமானம் சீனா சென்றது




### தென்கொரியா,ஈரான்,இத்தாலிக்கு செல்வதை தவிர்க்க மத்திய அரசு வலியுறுத்தல்



### பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர் பலி



### சீனாவில் பலி எண்ணிக்கை 2,800 ஆக அதிகரிப்பு



### கட்டுக்குள் வருகிறதா கொரோனா? சீனாவில் 29,745 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்



# அடிப்படைவாதிகளின் பேரம்பேசும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

**அடிப்படைவாதிகளின் பேரம்பேசும் நடவடிக்கைக்கு இம்முறை முற்றுப்புள்ளி வைப்போம் என இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். எனவே, அடிப்படைவாதிகள் இல்லாத அனைத்து இன மக்களையும் இணைத்துக்கொண்ட நாடாளு மன்றம் ஒன்றை உருவாக்குவதே எமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.**

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குக் கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்ல ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார். அவ்வாறு இடம்பெற்றால் நாடாளுமன்றம் வரும் மார்ச் 2 ஆம் திகதி கலைக்கப்பட்டு ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தல் இடம்பெறும் என நம்புகின்றோம்.

தேர்தலுக்குப் பின்னர் அடிப்படைவாதிகள் இல்லாத அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கிய நாட்டின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்க மக்கள் ஆதரவளிக்க வேண்டும்.

ஏனெனில் கடந்த 25 வருடங்களாக நாட்டில் ஆட்சி செய்த கட்சிகள் அடிப்படைவாதிகளுக்கு முன்னால் தலைகுனிந்தன. நாடாளுமன்றத்தில் தங்களுக்கு இருக்கும் குறிப்பிட்ட ஆசனங்களை வைத்துக்கொண்டு, ஆட்சியாளர்களுடன் பேரம்பேசி அவர்களின் அடிப்படைவாதத்தை அதிகரித்துக்கொண்டனர். அவ்வாறான அடிப்படைவாதிகளின் பேரம்பேசும் நடவடிக்கைக்கு இம்முறை முற்றுப்புள்ளி வைப்போம்.

அத்துடன் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் கல்வி அமைச்சராக பதியுதீன் மொஹமத் இருந்தார். அதேபோன்று பாக்கீர் மாக்கார் சபாநாயகராக இருந்தார். யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

கதிர்காமரை பிரதமராக்க வேண்டும் என இந்நாட்டு மக்கள் தெரிவித்தனர். அப்போது நாட்டில் இனவாதம் இருக்கவில்லை. அதனால் தேசிய வாதத்தையும் இனவாதம், அடிப்படைவாதம் என்பவற்றையும் ஒன்றாக்கி குழப்பிக்கொள்ளக் கூடாது.

ஆனால் அதன் பின்னரான காலப்பகுதியில் நாடாளுமன்றம் முற்றாக அடிப்படைவாதிகளின் ஆதிக்கத்துக்குக் கீழ் இருக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆட்சியாளர்கள் அவர்களின் கோரிக்கைகளுக்கு கீழ்ப்படிய வேண்டிய நிலையே இருந்தது.



உதாரணமாக உள்ளூராட்சி மன்றச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் அனுமதித்துக்கொள்ளும்போது சிலர் வாக்களிக்க மறுத்து சென்றுவிட்டனர்.

இறுதியில் அந்த அடிப்படைவாதிகளை வரவழைத்து, அவர்களுக்குத் தேவையான வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொடுத்தே அந்த சட்ட மூலத்தை அனுமதித்துக்கொள்ள முடியுமாகியது. அந்த நிலைமைக்கு நாடாளுமன்றம் சென்றுவிடாமல் பாதுகாக்க எதிர்வரும் தேர்தலில் மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# 1000 ரூபாய் சம்பளம் குறித்து 22 தோட்டக் கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## அரசிடம் கோருகிறார் வடிவேல் சுரேஷ்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளத்தை வழங்குவதாக உறுதியளித்ததைப்போன்று அதனை வழங்குவதற்கான நிலைப்பாட்டை 22 கம்பனிகளும் அறிவிக்க வேண்டும். இதற்கான அழுத்தத்தை அரசாங்கம் கொடுக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம்



வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக தோட்டத்தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தருவதாக அரசாங்கம் கூறியிருப்பினும் தோட்டக்கம்பனிகள் 1000 ரூபாய் சம்பளத்தை வழங்கத் தயாராகவில்லை. ஆகவே, ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட்டு 1000 ரூபாய் சம்பளத்தை வழங்குமாறு 22 தோட்டக்கம்பனிகளுக்கும் உத்தரவிட வேண்டும்.

ஜனாதிபதியால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தர முடியும். மலையகம் பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்பினும் கல்வியில் சிறந்து விளங்குகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சூதாட்டம்!

ஒருத்தர் குதிரை ரேசுக்குப் போனார். பணம் கட்டினார். தோற்றுப்போனார். அடுத்த தடவையும் பணம் கட்டப்போகும்போது அவரைத் தடுத்துக்கேட்டேன் ஏன் சேர் ஏற்கனவே விட்டது போதாதா? இன்னும் இருப்பதையும் விடவேண்டுமா? என்றேன்.

விட்டதையெல்லாம் மொத்தமாக எடுக்க வேண்டாமா? சேர்... அதற்காகத்தான் தொடர்ந்து பணம் கட்டுகிறேன் என்றார். இவரைத் திருத்துவது ரொம்ப கஷ்டம். இது ஒரு மனநோய். மனநோய்களிலே பலவகை உண்டு. மனநோய்கள் பிரிவு அட்டவணையில் சூதாட்டம் என்பது அவதியுறும் நோய் என்னும் தலைப்பில் வருகிறது.

சூதாட்டம் இரண்டு வகைப்படும் என்று சொல்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். ஒரு வகை என்னவென்றால்... நண்பர்களோடு சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைவதற்காக ஈடுபடுவது. பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே ஒரு ஆர்வம். கேளிக்கைக்காக கொஞ்சம் விட்டுப்பிடிப்பது என்பது மனிதனுடைய அடிமனதிலே உள்ள விபரீதப் பிணையச் சுபாவம். இதெல்லாம் அதற்குக் காரணம்.

இன்னொருவகை எப்படி என்றால்... சூதாட்டத்திலே ஈடுபட்டு ஒரு கட்டாய நிலைமைக்கு ஆகிவிடுவது. செய்... ஈடுபடு என்று மனது ஒரு வெறித்தன்மையைத் தூண்டிக்கொண்டே இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் தோற்றுக்கொண்டே இருக்கின்றோம் என்பது தெரியும்.

நாங்கள் ஜெயிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லையென்பதும் தெரியும்! இதனால் எங்களுக்கு கஷ்டம். எங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் கஷ்டம் என்பது தெரியும்.

அப்படி இருந்தும் சூதாடுபவர்கள் இதற்குக் காரணம் சூதாடியின் பகல் கனவு என்கிறார்கள் நிபுணர்கள். இந்த நிலைமைக்கு கட்டாயம் சூதாட்டம் அல்லது நிர்ப்பந்த சூதாட்டம் என்று பேர் வைத்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆசாமி இருப்பது பூராகவும் விட்டுவிடுவான்... கடன் வாங்குவான்... திருடுவான்... இருந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் ஜெயித்திடுவேன் என்று சொல்லிக்கொண்டிருப்பான். விட்டதை எடுத்திடுவேன் என்ற நம்பிக்கைச் சுடர் அவனுக்குள் எரிந்து கொண்டிருக்கும். இவனை மனநோயாளி என்று சொல்லிவிட முடியாது.

என்ன காரணம் என்றால் இவர்கள் மாதிரியானவர்களிடம் மனப் போராட்டமோ, கவலையோ, பதற்றமோ இருப்பதில்லை. சில விசேடமான குணங்கள் இவர்களிடம் உண்டு. எதிர்ப்புணர்ச்சி, சிறுபிள்ளைத்தனம், சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறியாத மனப்போக்கு...பொறுப்பில்லாத தன்மை... நெறிதவறி நடப்பது எல்லாம் இவர்களிடம் உண்டு.

ஆனால் வெளிப்பார்வைக்கு சிநேகமாகவும் அன்பாகவும் இருப்பதாகக் காட்டிக்கொள்வார்கள். ஆதாயம், சுயலாபம் கருதியே பழகுவார்கள். இவர்கள் கேட்கின்றபோது நாங்கள் பணம் கொடுக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். எங்களைக் கைவிட்டுவிடுவார்கள்.

எங்கள் மேல் அபாண்டமாக பழி சுமத்தவும் தயங்க மாட்டார்கள். தங்களுடைய சூதாட்ட நடவடிக்கைகளுக்குச் சாதகமான காரணங்களை சொல்லிக்கொண்டிருப்பார்கள். நீ வேண்டுமென்றால் பாரு... ஒரே நாளில் நான் இழந்தவற்றையெல்லாம் மீட்டு இலட்சாதிபதியாகிறேனா இல்லையா? என்பார்கள். தோற்றுப் போவதை ஒரு பிடியாக இவர்கள் எடுத்துக்கொள்வதே இல்லை. தோற்றுப் போவதிலும் இவர்களுக்கு ஒரு அலாதியான சுகம்.

தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக் கொண்டு இன்பம் அடைவதற்கு தன்வதை சுகம் என்று பெயர். இவர்களெல்லாம் அந்த ரகம். சில பேர் எப்படித் தெரியுமா? மந்திர எண்ணங்களை வரவழைத்துக்கொள்வது. சூதாடுவதற்காக அலுவலகத்தில் கையாடல் செய்வது... அடுத்தவர்களிடமிருந்து திருடுவது. இந்த மந்திர எண்ணம் தீவிரமாகிவிட்டது என்றால்... ஒரு மாதிரியாகப் பேச ஆரம்பித்து விடுவார்கள்...தோல்விதான் சேர் வெற்றிக்கு முதல் படி என்பார்கள்.

தன்னாலே பகடைக்காய்களையும்-குதிரை ஓட்டிகளையும் கட்டுப்படுத்த முடியும் என்கின்ற பித்து நிலைமைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். சில சூதாடிகளை ஆராய்ந்து பார்த்ததில் என்ன தெரிய வந்தது தெரியுமா? அவர்களெல்லாம் குழந்தைப் பருவத்திலே அன்புக்காக ஏங்கிய வர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள். உதவிகளைப் பெற முடியாத வர்கள் இப்படி இருந்திருக்கிறார்கள். இவர்கள் வளர வளர மற்றவர்கள் சௌகரியம் பற்றி அக்கறை இல்லாதவர்கள் ஆகிவிடு கிறார்கள்.

அதிர்ஷ்ட தேவதை தன்னுடன் இருக்கிறார்கள் என்ற அசையாத நம்பிக்கை இவர்களுக்கு உண்டு. இவர்களைத் திருத்துவது ரொம்ப கஷ்டம். அதனால் பந்தயம்-சூதாட்டம் இதுபோல விடயங்களை விட்டு விலகியே இருப்பதுதான் நல்லது.

ஒருவர் சொன்னார், என் குதிரை வேகமாக ஓடுவதற்கு என்ன வழி? என்று கால்நடை மருத்துவரிடம் கேட்டேன். அவர் ஒரு போத்தல் நிறைய மாத்திரைகளை கொடுத்து தினம் இரண்டு மாத்திரை வீதமாகக் கொடுக்கச் சொன்னார். முதல் நாள் இரண்டு மாத்திரையைக் கொடுத்தேன். கொடுத்துவிட்டு அதன் மேலேறி உட்காரப் போனேன். அவ்வளவுதான்... அதற்குள்ளே அது அம்பு மாதிரி பாய்ந்து ஓடிப்போய்விட்டது என்றான்.

அடடா அப்புறம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். மீதி மாத்திரை பூராகவும் நான் முழுங்கிவிட்டு அதைத் துரத்திப் பிடித்தேன் என்றார் அவர்.

## பலாலியில் நிபுணர்கள் குழு ஆய்வு

# யாழ்ப்பாணம் எனக்கு இரண்டாவது இல்லம்

## முன்னாள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை சர்வதேச தராதரத்துக்கு கட்டி எழுப்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படுகின்றன என்று சிவில் விமான சேவைகளுக்கான தலைவரும், வட மாகாண முன்னாள் ஆளுநருமான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

சந்திரசிறி தலைமையில் துறை சார்ந்த நிபுணர்கள் 30 பேர் கடந்த புதன்கிழமை காலை விசேட விமானம் மூலம் பலாலிக்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

இது குறித்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துக் கூறிய சந்திரசிறி மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டம் எனக்கு இரண்டாவது இல்லம். நான் வடமாகாண ஆளுநராக பதவி வகித்த காலத்தில் என்னால் முடிந்த அதிகபட்ச சேவைகள் அனைத்தையும் எனது தமிழ் உறவுகளுக்கு இதய சுத்தியுடன் செய்து இருக்கின்றேன்.

தற்போதைய சிவில் விமான சேவைகளுக்கான தலைவர் பதவி மூலமாகவும் வட மாகாண மக்களுக்கு என்னால் முடிந்த அனைத்து சேவைகளையும் செய்து கொடுப்பதற்கு முன்வந்து இருக்கின்றேன். அந்த வகையிலேயே யாழ்.மாவட்டத்துக்கான எமது விஜயம் இடம்பெற்றது.

பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதோடு அழகுபடுத்தவும் இங்கு குறை நிரப்பு வேலைகளை மேற்கொள்ளவும் சுற்றுலாத் துறையை வட ம்ாகாணத்தில் மேம்படுத்தவும் துறைசார்ந்து யாழ்.மாவட்ட இளையோர்களுக்கான வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்தவும் தீர்மானித்து இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னோக்கிச் செல்லும் மலையகத்தை யாரும் பின்னோக்கி இழுக்க வேண்டாம்

## வேலுகுமார் வேண்டுகோள்

(கண்டி)

"மலையக சமூக மாற்றத்துக்கான விதைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி விதைத்துள்ளது. எனவே, அவற்றை சிதைக்காமல், உரிய வகையில் பராமரித்து சமூகத்துக்காக அறுவடை செய்ய வேண்டிய கடப்பாடு தற்போது ஆளுங்கட்சியில் இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்"க்கு இருக்கின்றது.

எனவே, கட்சி அரசியலை நடத்தி முன்னோக்கிச் செல்லும் மலையகத்தை யாரும் பின்னோக்கி இழுக்க வேண்டாம் என வலியுறுத்துகின்றோம்" என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சிச் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி உதயமானது. அதன் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்கு எமது மலையக மக்களும் முழுமையான பங்களிப்பை வழங்கினார்கள்.

எம்மக்களின் ஆணையை ஏற்று அவர்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக நான்கரை ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுத்தது. கண்டி மாவட்டத்திலும் பல புரட்சிகரமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல எமது மக்களுக்காக வெளிநாடுகள் மற்றும் அமைப்புகளுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சிறந்த உறவைப் பேணியது. இதன் பயனாகவே 10 ஆயிரம் வீடுகளை வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் மோடி நடவடிக்கை எடுத்தார்.

புஸல்லாவை சரஸ்வதி கல்லூரியில் புதிதாக கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கும் இந்



திய அரசாங்கத்தால் உதவியளிக்கப்பட்டது.

அத்துடன், பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 900 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கும் இந்தியா முன்வந்தது. இதன் முதற்கட்டமாக 300 மில்லியன் ரூபாய் கிடைக்கும்.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விடயத்தில் அரசாங்கத்தையும் மூன்றாம் தரப்பாக இணைப்பதற்கான நடவடிக்கையை எமது அணியே முன்னெடுத்திருந்தது.

இவ்வாறு எமது சமூக விடுதலைக்காக தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் அபிவிருத்தி அரசியல், உரிமை அரசியல் ஆகிய விதைகள் தமிழ் முற்போக்கு கூட்டணியால் விதைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பராமரித்து அறுவடை செய்வதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எது எப்படியிருந்த போதிலும் பொதுத்தேர்தலின் பின்னர் ஆட்சி அதிகாரம் எமது கைகளுக்கு வந்த பின்னர், மலையக மறுமலர்ச்சித் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாக்குறுதிகளை நிறைவேற்றாது அடக்கு முறை ஆட்சியை அரசாங்கம் தொடர்கிறது

## காவிந்த காட்டம்



(கொழும்பு)

அரசாங்கம் அதன் ஆட்சிக் காலம் முடியும் வரை மக்களுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது என்பது அதன் தற்போதைய செயற்பாடுகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக கூறிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன, தற்போதைய அரசாங்கம் தமது அடக்கு முறை ஆட்சியை வெளிப்படுத்தி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் சூரியவெவ விளையாட்டு அரங்கில் இடம் பெற்ற விளையாட்டை பார்வையிடச் சென்றவரகள் மீது பொலிஸார் தாக்குதல்களை மேற்கொண்டமையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது ஆட்சிக்காலம் முடியும் வரை மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசாங்கமாக்வே தற்போதைய அரசாங்கம் விளங்கப்போகின்றது என்பது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது தமது வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதையடுத்து மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதாக குறிப்பிட்ட அரசாங்கத் தரப்பினர் தற்போது பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகத் தெரிவித்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் போக்கை பார்க்கையில் பாராளுமன்றத் தேர்தலையடுத்து மாகாணசபைத் தேர்தல் என்றும் பின்னர் பிரதேச சபைத் தேர்தல் என்றும் கூறிக் கொண்டு தமது வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாது காலங்கடத்துவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசாங்கமென்றால் தாம் ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் கடந்துள்ள நிலையில் ஒரு வாக்குறுதியையேனும் நிறைவேற்றியிருக்கும் அல்லவா?

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த கால கட்டங்களில்முன்னெடுக்கப்பட்ட அதே ஆட்சி முறைதான் தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை பொலிஸார் தாக்கியிருந்தனர்.

சாதாரணமாக பெண் சந்தேக நபர் ஒருவர் ஆண் பொலிஸாரால் கைது செய்யக்கூட அனுமதி இல்லாத நிலையில் , ஆண் பொலிஸார்கள் பெண்களைத் தாக்கியிருந்தனர். இதேவேளை சூரியவெளி விளையாட்டரங்கில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டிகளை பார்வையிடுவதற்காகச் சென்ற எம்நாட்டு ரசிகர்கள் பலர் தாக்கப்பட்டிருந்தனர். தேசிய அபிமானத்துடன் தமது கைகளில் தேசிய கொடிகளை ஏந்திய வண்ணம் சென்றவர்களை விரட்டி தாக்கியமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதனால்நாட்டுக்கு ஏற்பட்ட அவ்பெயரை யாராவது பொறுப் பேற்ற வேண்டும். இவ்வாறு யார் மீதும் தாக்குதல்களை மேற்கொள்ள யாருக்கும் உரிமையில்லை. அதேவேளை இராணுவ ஆட்சி முறை நாட்டுக்குத் தேவையில்லை.

தற்போது இடம்பெற்று வரும் தாக்குதல்கள் சமூகத்திற்கு தவறான எண்ணங்களை போதிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 13வது திருத்தமும் மாகாண சபைகளின் நிதி நிர்வாகமும்

08

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



விபரம் அட்டவணை 7 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 7- மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) 2017 மற்றும் 2018

| | 2018 | 2017 | | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|
| | வீதம் % | | | வீதம் % | |
| பொருளாதார உட்கட்டமைப்பு துறை | 52.06 | 51.66 | சமூக உட்கட்டமைப்பு துறை | 47.94 | 48.34 |
| மாகாண வீதிகள் | 20.37 | 16.11 | கல்வி | 19.32 | 19.65 |
| தோட்ட உட்கட்டமைப்பு | 0.83 | 0.71 | மேற்கத்தேய வைத்தியம் | 17.06 | 19.46 |
| போக்குவரத்து | 1.36 | 1.67 | சுதேச வைத்தியம் | 3.61 | 2.94 |
| காணி | 0.38 | 0.28 | விளையாட்டு | 1.07 | 1.05 |
| விவசாயம் | 5.65 | 7.35 | சிறுவர் நன்னடத்தை | 3.80 | 2.30 |
| கால்நடை | 4.00 | 4.11 | சமூக சேவைகள் | 1.50 | 1.37 |
| நன்னீர் மீன் வளர்ப்பு | 1.17 | 1.25 | கலாசாரம் மற்றும் மத விவகாரங்கள் | 0.82 | 0.68 |
| நீர்ப்பாசனம் | 4.30 | 3.91 | வீடமைப்பு | 0.66 | 0.62 |
| கிராமிய அபிவிருத்தி | 1.89 | 2.11 | கூட்டுறவு | 0.10 | 0.27 |
| சிறு கைத்தொழில்கள் | 1.65 | 1.60 | | | |
| கிராமிய மின்சாரம் | 1.14 | 0.71 | | | |
| சுற்றுலா | 2.42 | 2.71 | | | |
| உள்ளூராட்சி | 6.90 | 9.15 | | | |
| மொத்தம் (ரூபா மில்லியன்) | | | | 18,012 | 10,888 |
| நெகிழ்ச்சியான தொகையின் கீழான கருத்திட்டங்கள் | | | | 494 | 108 |
| விசேட தேவையுடைய கிராமங்களுக்கான கொடைகள் | | | | 2,030 | 1,030 |
| குறித்தொதுக்கிய மொத்தக் கொடைகள் | | | | 20,536 | 12,026 |

### பிரமாண அடிப்படைக் கொடை (The Criteria Based Grant)- CBG

மாகாணத்திற்கான குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடையினைப் போன்றே பிரமாண அடிப்டைக் கொடையும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் மாகாணங்களில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இக் கொடையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் நிதியானது தமது விருப்பத்துக்கேற்ப அபிவிருத்திகளில் செலவு செய்ய முடியும். எவ்வாறாயினும் மாகாண சபைகளானது பிரமாண அடிப்படையிலான கொடையினை நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கேற்பவே பயன்படுத்தப்படல் வேண்டும்.

### வருமானச் செயலாற்றுகைக் கொடை (Revenue Performance Grant) –RPG

மாகாண வருமான சேகரிப்பினை ஊக்குவிக்கும் வகையில் ஒரு புதிய கொடையாக "வருமான செயலாற்றுகை கொடையானது" நிதி ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது மாகாண வருமான சேகரிப்பின் பெருக்கத்தினை மையப்படுத்திய அபிவிருத்திக் கொடையாகும். மாகாண சபைகளுக்கு இக்கொடையினை மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மீது தாம் விரும்பியவாறு பயன்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை இக் கொடைகளைப் பெறுவதற்கு முதலில் தனது சபையின் வருடாந்த வருமானம் செலவீனங்களைக் கருத்தில்கொண்டு வரவு-செலவுத்திட்டத்தை தயாரித்து மாகாணசபையில் வாக்களிப்பு மூலம் நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். இவ் வரவு-செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு பல நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். செலவு இரண்டு வகைப்படும். ஒன்று மீண்டெழும் செலவு **(recurrent expenditure).** மற்றையது மூலதனச் செலவு **(capital expenditure)** ஆகும்.

### மாகாண சபையின் மீண்டெழும் செலவு

மாகாணங்களின் செலவுகளில் மீண்டெழும் செலவானது அதிக பங்கைக் கொண்டுள்ளது. இது பிரதானமாக சம்பளக் கொடுப்பனவு, மேலதிக நேரவேலைக் கொடுப்பனவுகள், விடுகை நாட்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களுக்கான ஏனைய மேலதிகக் கொடுப்பனவுகள் உட்பட மாகாணங்களின் நாளாந்த செலவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மாகாணங்கள் கொண்டுள்ள மூலதனச் சொத்துக்களைப் பராமரிக்கும் செலவும் மீண்டெழும் செலவுக்குள் உள்ளடங்கும்.

### மாகாண சபையின் மூலதனச் செலவு

மாகாணங்களினால் செலவுத் தேவைகளின் மதிப்பீடானது நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட துறை ரீதியான வெளியீட்டு வேலைச் சட்டகத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. மாகாணங்களுக்கான மூலதனச் செலவுக் கோரிக்கையானது நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மாகாணம் குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைகள் பின்வரும் வகைகளின் கீழ் மாகாணங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும். (அ) துறை. (ஆ) விசேட தேவையுடைய கிராமங்களுக்கான கொடைகள், (இ) நெகிழ்ச்சியான ஒதுக்கம் மற்றும் (ஈ) தேசிய மட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள விசேட திட்டங்கள். இதுபற்றி தெளிவாக முன்னர் கூறப்பட்டது.

### மாகாண சபையின் மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவுக்கான வருடாந்த வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரித்தல்

மாகாண சபையின் மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவுக்கான வருடாந்த வரவு-செலவுத்திட்டத்தைத் தயாரிக்கும்போது நிதி ஆணைக்குழுவும் பல ஆலோசனைகளை வழங்கும் எனவும் அவை எவையெனவும் முன்னர் கூறியிருந்தோம். இவ் ஆலோசனைகள் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டம் ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக வழங்கப்படுகிறது. விசேடமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 19(5) மற்றும் 20(3) ஆகியவற்றின் கீழே காட்டப்படும் விதிமுறைகளில் மாகாண சபைகள் கவனம் செலுத்தவேண்டும். அந்தந்த மாகாண ஆளுநர்களால் சட்டமாக்கப்படும் மாகாணசபை நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக சகல நிதி நிர்வாக நடவடிக்கைகளும் நிறைவேற்றப்படல் வேண்டும்.

**முன்னைய ஜனாதிபதி, 21.02.2019 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையின் ஒரு பகுதி - "13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட மாகாண சபை சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டு தற்போது 30 வருடங்களுக்கும் மேலாகிறது. ஆனால் மாகாண சபை முறைமையில் வெற்றி, தோல்வி முறைப்பாடுகளோ அவற்றை வலுவூட்டும் முறைமை தொடர்பிலோ 30 வருட காலமாக எந்தவொரு அரசாங்கமும் மீளாய்வு செய்யவில்லை. அதனால் மாகாண சபைகளில் நாங்கள் எதிர்பார்த்த நோக்கங்கள் வெற்றியடைந்துள்ளதா? தோல்வியடைந்துள்ளதா? என்பதை கணக்கிட்டு கூற முடியாது. இன்று மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யும் நிதியானது 85 சதவீதம் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் 15 சதவீதம் அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படுகிறது. மாகாண சபைகளைக் கலைத்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையில் பல்லாயிரக்கணக்கான மாகாண சபை அதிகாரிகள் பொறுப்புக்களோ வேலைகளோ இன்றி உள்ளனர் தொடர்பில் நாம் எமது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை. மீளாய்வு செய்து அது தொடர்பில் கண்டறிந்து மாகாண சபைகளை வலுவூட்டுவதற்கும் அதை சரியான பாதைக்கு கொண்டு வருவதற்கும் முடியாமல் போயுள்ளது."**

அந்த நிதிப்பிரமாணங்களில் காட்டப்பட்டுள்ளதற்கு அமைவாக பொருத்தமான சந்தர்ப்பங்களில், நிதி ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்பதுடன், நிதி ஆணைக்குழுவால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் ஆலோசனைகள் சுற்றறிக்கை அல்லது கடிதமூலம் மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்படும். நிதித் தேவைகளை மதிப்பிடுகையில் இந்த வழிகாட்டுதல்கள் பிரமாணங்களோடு இணைக்கப்பட்டுள்ள படிவங்களுக்கு அமைவாக நிதித் தேவையைக் கணக்கிட்டு குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் நிதி ஆணைக்குழுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாகாண நிதித் தேவைகளை நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய பொருத்தமான படிவங்கள் பின்வரும் பிரதான ஐந்து பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

i.மாகாணத் திணைக்களங்கள் / நிறுவனங்களுக்குரிய மீண்டுவரும் செலவு மதிப்பீட்டுப் படிவங்கள்
ii.உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மாற்றல்கள் சம்பந்தமான மதிப்பீட்டுப் படிவங்கள்
iii.வருமானம் பற்றிய மதிப்பீட்டு படிவம்
iv.நிதி முகாமைத்துவம் பற்றிய மதிப்பீட்டு படிவம்
v.அதிகார்சபை / நியாயாதிக்க சபைகளின் விபரப்பட்டியல் படிவங்கள்

நிதித்தேவை மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணம் விசேடமாக முந்திய வருடங்களில் முன்னேற்றங்களை கவனத்தில் கொண்டு மாகாணத்தின் குறிக்கோளை அடைவதற்கு ஏற்றவகையில் தேவையான ஆரம்ப திட்டம் தயாரிக்க வேண்டும் என்பதே ஆகும். மாகாண நிதி முதலீடுகள் மூலம் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு எளிதாக மாகாணங்களில் நாளாந்த சேவைகளையும் மற்றும் நடவடிக்கைகளையும் கொண்டு நடத்துதல் மீண்டுவரும் செலவுகள் மூலம் பிரதானமாக எதிர்பார்க்கப்படுகிறது. மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்குரிய ஆளுக்குரிய வேதனாதிகள், தேசிய சம்பளக்கொள்கைகளுக்கு அமைவாக கணக்கிடப்படுதல் வேண்டும்.

ஏனைய மீண்டுவரும் செலவுகளின் கீழ், நிறுவனத்தின் வழங்கல் மற்றும் சேவைகளைக் கொண்டு செல்வது. பேணுவது மற்ற நிறுவனங்களுக்கு மாற்றுதல் , வழங்குதல் முக்கியமாகும். ஏனைய மீண்டுவரும் செலவுகள் தேவைகளை கணக்கிடும் போது கடந்த கால உண்மைச் செலவுகளைக் கவனத்தில் எடுப்பதோடு அதில் கூறப்பட்ட செல்வுகள் நிறுவன சேவையை வழங்குவதற்காக எவ்வளவு தூரம் பங்களித்துள்ளது தொடர்பாக மீண்டும் ஆராய வேண்டும். அதற்கேற்ப, இச்செலவுகளை முடிந்த அளவுக்கு முகாமைத்துவம் செய்வதற்கும், இது தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை, திறைசேரி சுற்றறிக்கை மற்றும் தொடர்பான அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் பிரகாரம் செலவுகள் மேற்கொள்வதற்கும் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்துதல் அவசியமாகும்.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் அடுத்த வருடத்திற்கான நிதி கோரிக்கை தொடர்பான நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டல்கள் சுற்றறிக்கை மாகாண சபைகளுக்கு வழங்கப்படும். பெப்ரவரி மாதத்தில் மாகாண மீண்டுவரும் செலவு ஆலோசனைத் தொகுப்புகளைத் தயாரிப்பதற்காக பிரதம செயலாளர்களின் தலைமையில் மாகாண சபைகளில் கூட்டங்கள் நடத்தப்படும். பெப்ரவரி மாதம் முடியுமுன் மாகாண சபைகளினால் மாகாண திணைக்களங்கள் / மாகாண நிறுவனங்களுக்கு மீண்டுவரும் செலவு ஆலோசனைத் தொகுப்புகள் அனுப்பப்படும். மே மாதம் முடியுமுன் வருடத்துக்கான மாகாண மீண்டுவரும் செலவு நிதித் தேவை மதிப்பீடுகள் பிரதம செயலாளர்களால் நிதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும். அதன்பின் நிதி ஆணைக்குழு மாகாண மீண்டுவரும் தேவைகளுக்கான மதிப்பீட்டுக் கூட்டங்களை நடத்தும். அதன்பின் நிதி ஆணைக்குழு மதிப்பிடப்பட்ட மாகாண மீண்டுவரும் நிதிதேவைகளை தேசிய வரவு-செலவுத் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதோடு மாகாண மூலதன நிதி மீண்டுவரும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தேவையான நிதி தொடர்பாக நிதி அமைச்சுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும். நிதி ஆணைக்குழு ஒகஸ்ட் மாதம் முடியுமுன் மாகாணங்களுக்கு ஒதுக்கீடுகளை அறிவிப்பதோடு மாகாண தேவைகளை ஜனாதிபதிக்கு தெரிவிக்கும்.

(தொடரும்)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கும் போது அங்கத்துவக் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டும்




## ரெலோ சுரேந்திரன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கும் போது அல்லது கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் போது அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களையும் இணைத்து முடிவெடுக்க வேண்டுமென ரெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ளவருமான குருசாமி சுரேந்திரன் வேண்டுகோள் விடுத்தார்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து ஈ.பி.டி.பி. வசமானது.

இந்நிலையில் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் ரெலோ உறுப்பினர்களுடன் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அறிவிக்காமல் கலந்துரையாடியுள்ளதாக முன்வைத்த குற்றச்சாட்டுத் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை எவ்வாறு நோக்குகிறீர்கள் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவுப் பிரதேச சபையில் பெரும்பாலான உறுப்பினர்களைக் கொண்டதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி காணப்படுகிறது.

எனினும் கடந்த காலத்தில் ரெலோ சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு நான்கு உறுப்பினர்களுடன் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த இருவரின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தோம்.

துரதிர்ஷ்டவசமாக தவிசாளர் வேறு கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டதால் அவரை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந் நிலையில் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்க உதவிய சுயேட்சைக் குழு எம்மோடு ஒத்துழைக்காத நிலையில் ஆட்சி கைமாறியது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அங்கத்துவக் கட்சிகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் போது அக்கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வெள்ளைவான் கடத்தல் விவகாரம்; ஊடக சந்திப்பில் பங்கேற்றவர்களின் குரல் மாதிரிகள் உறுதியானது!



(கொழும்பு)


வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் பங்குபற்றிய இரு சந்தேக நபர்களினதும் குரல் மாதிரிகள் ஒலிப்பதிவுகளுடன் ஒத்துப்போவதாக அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளது. இதனை சி.ஐ.டி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜெயரட்ண முன்னிலையில் நேற்று முன்தினம் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பிரதி சொலிசிற்றர் ஜெனரல் மேற்கண்டவாறு கூறினார். முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஊடகச் செயலாளரான மலிக் விஜேநாயக்க இச்செய்தியாளர் சந்திப்பை நடத்திய முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களுக்காக 15 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் முன்னாள் அமைச்சரின் ஊடக செயலாளரிடம் சி.ஐ.டி அதிகாரிகள் வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய வேண்டியுள்ளபோதும் அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதே வேளை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் ஹசீம் மொஹமட் ரூமி மீது விதிக்கப்பட்ட பயணத்தடையை ஏப்ரல் 10 தொடக்கம் 25 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் நீக்குமாறும் அவர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி குணரட்ன வன்னி நாயக்க தெரிவித்தார்.

மேலும் சந்தேக நபர்களான சகலவள்ளி ஆரச்சிகே சரத்குமார மற்றும் அத்துல சஞ்ஜீவ மதநாயக்க ஆகிய இருவரும் இன்னுமொரு வழக்கின் காரணமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் சி.ஐ.டியினர் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர். இது தொடர்பான வழக்கு மார்ச் 3 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# புத்தளத்தில் தீ!



(புத்தளம்)

புத்தளம் சிறாம்பையடி பகுதியில் உள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு பின்னால் காணப்படுகின்ற காணியில் நேற்றுக் காலை தீ பரவியது.

இதன்போது புத்தளம் நகர சபையினருக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர் நகரசபை தீயணைப்புப் பிரிவினர் குறித்த பகுதிக்கு விரைந்து சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்நிலையில், 6 ஏக்கர் நிலப்பரப்பு வரை தீயினால் எரிந்துள்ள நிலையில் மருமுந்திரிகை மரங்கள், தென்னை மரங்கள், பனை மரங்கள் சில தீயில் கருகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஐ)

## உண்மைச் சதுக்கம்

# பொய்களை முடக்குவோம் அமைப்பு அங்குரார்ப்பணம்




(கொழும்பு)

'உண்மைச் சதுக்கம் - பொய்களை முடக்குவோம்' எனும் அமைப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் பரப்பப்படும் போலிச் செய்திகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு கட்சிகளுக்குள்ளும் எதிர்கால அரசியல் சந்ததிகளை உள்வாங்கி, நேர்த்தியான அரசியல் கலாசாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே குறித்த அமைப்பை உருவாக்கியுள்ளதாக அந்த அமைப்பின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். (இ-7)

## எக்காரணம் கொண்டும் மாற்ற மாட்டோம்

# "தாமரை மொட்டு" சின்னத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி

## பசில் திட்டவட்டம்



(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத மாபெரும் வெற்றி பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணி கூட்டணியின் பிரதான இலக்காகும் என ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியின் செயலாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய கூட்டணி தொடர்பில் கருத்துக் கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்களக் கட்சிகள் மட்டுமன்றி தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் எமது புதிய கூட்டணியில் இணைத்து வருகின்றோம். இதுவரை 14 கட்சிகள் இணைந்துள்ளன. மேலும் பல கட்சிகளை இணைக்கவுள்ளோம்.

இலங்கை அரசியல் வரலாற்றில் பலமிக்க கூட்டணியாக எமது கூட்டணி செயற்படும்.

"தாமரை மொட்டு" சின்னத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்போம். சின்னம் தொடர்பில் இறுதி முடிவு எடுத்துவிட்டோம். எனவே, எக்காரணம் கொண்டும் சின்னத்தை மாற்றமாட்டோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை நிறுவ ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் எமது கட்சிக்குத் கிடைத்த அமோக வெற்றியினால் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர முன்னணியை சுபமாக நிறுவியுள்ளோம்.

எமது கூட்டணி நாட்டு மக்களின் பேராதரவுடன் வரலாறு காணாத மாபெரும் வெற்றியை நாடாளுமன்றத் தேர்தலில் பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்றும் பசில் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச வலைக்குள் இருந்து விடுதலை பெற்றது இலங்கை

## கோட்டா அரசின் நடவடிக்கை குறித்து சமல் பெருமிதம்

(கொழும்பு)

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களுக்கு ரணில் அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தமையால் சர்வதேச சமூகத்தின் வலைக்குள் இலங்கை சிக்கி யிருந்ததாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். ஆனால், அந்தத் தீர்மானங் களுக்கான இணை அனுசரணையிலிருந்து கோட்டாபய அரசு தற்போது விலகியுள்ளமையால் நாட்டுக்கு விடுதலை கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.**

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை விலகியுள்ளமை குறி த்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கை யில், எவ்வித ஆதாரங்களும் இன்றி இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக் களையும் போர்க் குற்றச்சாட்டுக் களையும் சில நாடுகள் ஜெனி வாவில் முன்வைத்திருந்தன.

அதன் பிரகாரம் இலங்கை க்கு எதிராக தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருந்தன. இதற்கு ரணில் அரசானது அமைச்ச ரவை மற்றும் நாடாளுமன் றத்தின் அனுமதியின்றி இணை அனுசரணை வழங்கியிருந்தது.

இதனால் எமது நாடு சர்வ தேச சமூகத்தின் வலைக்குள் சிக்கித் தவித்தது. எனினும், அந்தப் பொறிக்குள் இருந்து தற்போது நாம் தப்பிவிட்டோம்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையை நாம் வெறுக்கவும் இல்லை. பகைக்கவும் இல்லை. ஆனால், இலங்கை மீதான தேவையற்ற குற்றச்சாட்டுக் களையும் சர்வதேசத்தின் அநாவசிய தலையீட்டையும் மட்டுமே நாம் எதிர்க்கின்றோம்.

வன்னியில் இறுதிப்போர் தமிழ் மக்களுக்கு எதிராக நடக்கவில்லை. தமிழீழ விடு தலைப் புலிகளின் பிடியிலிரு



ந்து அப்பாவித் தமிழ் மக்களை மீட்டெடுக்கவே எமது இராணு வத்தினர் போரிட்டனர்.

அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர். தமிழ் மக்கள் இன்று நிம்மதியாக வாழ்கின்றார்கள். இதை ஐ.நாவும் சர்வதேச நாடு களும் புரிந்து கொள்ள வேண்டும் என சமல் மேலும் சுட்டிக்காட்டி னார். (இ-7)

# உள்நாட்டு பெரிய வெங்காயத்திற்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

உள்நாட்டு விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தை 60 முதல் 80 ரூபாய் கட்டுப்பாட்டு விலைக்கு கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்தது.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குண வர்த்தன இதனைத் தெரிவித் தார். (இ-7)

# சஹ்ரானின் சகோதரி,மைத்துனன் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(ஏறாவூர்)

கைது செய்யப்பட்ட உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ் ரானின் சகோதரி மற்றும் மைத் துனன் ஆகிய இருவரையும் எதிர் வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்க மறிய லில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் உத்தரவிட் டார்.

குறித்த குண்டுத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாத அமைப்பின் சஹ்ரான் தலைமை யிலான பயங்கரவாதிகள் மேற் கொண்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து அவரின் சகோதரியான முகமது காசிம் முகமது மதனியா மற்றும் அவரது கணவர் முகமது நியாஸ் ஆகியோரை கடந்த 2019 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி காத்தான்குடியில் வைத்து கைது செய்ததுடன் 20 இலட்சம் ரூபாய் பணத்தையும் பொலிஸார் மீட்டனர்.

இச சம்பவத்தில் கைது செய்ய ப்பட்ட இவர்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப் பட்டு சி.ஐ.டியினர் விசாரணை களை மேற்கொண்டு வந்த னர்.

இந்நிலையில் இவ் இருவரை யும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப டுத்திய போது இவர்களை எதிர் வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவிட் டார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1989

Search for people, places and things

### சந்தோஸ்



அங்கிள் உங்க கையில தான் என்னோட வாழ்க்கையே இருக்கு தலை பத்திரம்... பாத்து பழகுங்க...

### வாசஸ்பதி

போன மாதம் 45 கிலோ இருந்தேன்,இப்போ 50 கிலோ இருக்கேன்.போட்டு இருக்கிற பேண்டு சைசும் மாறல சர்ட் சைசும் மாறல...



அப்ப கண்டிப்பா அறிவுதான் வளர்ந்திருக்கும்

### ரித்விகா



ஆமா.... நாம இப்ப எங்க தான் போய்க் கொண்டு இருக்கோம். வந்த வழி கூட மறந்து போச்சு...

### நஷ்ரயா

வாழ்க்கை தேடல்களுக்கான
சிறந்த விடை உன் அனுபவங்களால்
உனக்கு கிடைக்க பெறும் ஆதலால்
எதையும் நேருக்கு நேராக சந்தித்து
விட்டு வெற்றி பெற்றால்
ஜெயமாகட்டும் தோல்வியுற்றால்
ஒரு சிறந்த அனுபவமாய்
அமையட்டும்...!

### கம்ஷாயினி

மாட்டை அடக்குறவருக்கு என் மூத்த பொண்ணை கட்டிக்கொடுப்பேன்



யோ மாம்ஸ் கன்னுக்குட்டிய அடக்கிட்டேன் இளைய பொன்னு எனக்குத் தான்...

### நிகாஷ்

சண்டை பிடித்து 10வது நிமிடத்தில் வந்து இப்போ என்ன உன் பிரச்சினை பேசப் போறியா இல்லையா?



என்று பாசமாய் அடுத்த சண்டைக்கு தயாராகும் நண்பனே ஒரு நல்ல பிரண்டுக்கு அடையாளம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைக்காக

# நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க முடியாது

## வியத்மகவின் பேச்சாளர் பேரா.நாலக உறுதி

(கம்பஹா)

**ஜெனிவா பிரேரணையிலிருந்து இலங்கை விலகுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றவில்லை. அபிவிருத்தி என்ற பெயரில் நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்க முடியாது என வியத்மக அமைப்பின் இணைப்பேச்சாளர் பேராசிரியர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.**

கம்பஹா நகரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தொடர்பில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜெனிவா பிரேரணை நாட்டுக்கு எதிரான காட்டிக்கொடுப்பு என்றே குறிப்பிட வேண்டும்.

தூர நோக்கு கொள்கையை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் இந்தப் பிரேரணையிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்தது. இந்தத் தீர்மானம் எமது நாட்டின் தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம்ஜெனிவா பிரேரணையில் இருந்து விலகுவதால்எவ்விதப்பாதிப்பும்ஏற்படாது. இந்தப் பிரேரணையை 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்தது. பின்னர் 2017ஆம்ஆண்டு அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையை கடுமையாக விமர்சித்து பேரவையிலிருந்து வெளியேறியது.

இவ்வாறான நிலையில் இலங்கை குறித்த பிரேரணையிலிருந்து விலகுவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. நாடு என்ற ரீதியில் இலங்கை சிறிய பரப்பளவைக் கொண்டிருந்தாலும் இறையாண்மை மற்றும் தேசியக் கொள்கை உள்ளிட்ட விவகாரங்களில் முன்னணி வகிக்கின்றது.

சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெற்று ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொண்டோம் என ஐக்கிய தேசியக் கட்சியினர் பெருமை கொள்கின்றார்கள். இந்த வரிச்சலுகையைப் பெற்றுக் கொண்டதால் எவ்விதத்திலும் தேசிய பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை.

2014 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி இருந்த நிலையைக் காட்டிலும் வீழ்ச்சியடையும் முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தையே ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்தது.

பிரேரணையிலிருந்து அரசாங்கம் விலகுவதால் எவ்வித பாதிப்பும் பொருளாதார ரீதியில் ஏற்படாது. ஒரு தரப்பினரது போலியான குற்றச்சாட்டுக்களினால் அழுத்தங்கள் மாத்திரமே பிரயோகிக்கப்படும். அவையும் ஒரு வரையறைக்குட்பட்டதாகவே காணப்படும்.

தேர்தல் காலத்தில் மக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றி விட்டார் என்பதையிட்டு பெருமைகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவர்கள் கௌரவிப்பு





(சாவகச்சேரி)

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமது கிளையில் கணக்கினைப் பேணி வருகின்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி கிளை முகாமையாளர் சி.முரளிகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் திருமதி சு.பிரபாகரனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் திருமதி நி.சுரேந்திரராஜ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் எஸ்.சபேசன் மற்றும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நடேசலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. (இ-30)

## வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வடக்கு மாகாண சபைக்கு முன்பு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீண்ட காலமாக சுகாதாரத் தொண்டர்களாக கடமையாற்றி அண்மையில் நிரந்தர நியமனத்திற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டும் இன்றுவரை கடமையைப் பொறுப்பேற்க விடாது தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 387 சுகாதாரத் தொண்டர்கள் கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபை கட்டடத் தொகுதிக்கு முன்பு இவ்வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-10)

## தவறி விழுந்த குழந்தை பலி!

(நவகத்தேகம)

நவகத்தேகம பகுதியில் 6 மாதக் குழந்தை ஒன்று மேசையில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்தது. கடந்த 26 ஆம் திகதி மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 6 மாதமான தனுஜ தஹம்ச எனும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது. இச் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் வீட்டில் குறித்த குழந்தை தனது பாட்டியுடன் இருந்ததாக தெரியவந்தது. மேசையில் இருந்து தவறி விழுந்த குழந்தை பலத்த காயங்களுக்கு உள்ளாகி நவகத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் இ.வே.செல்வரத்தினத்தின் 90 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு உடுப்பிட்டி நாவலடி சிக்கனக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கே.குணசிங்கம் தலைமையில் இடம்பெறும். (இ-10-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 | 120 |
| தக்காளி | 140 | 150 | 110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 120 |
| கோவா | 80 | 100 | 110 | 120 |
| கரட் | 180 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 120 | 60 | 120 |
| புடோல் | 80 | 140 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 100 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 240 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 180 |
| பாகற்காய் | 160 | 100 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 70 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 90 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 160 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 250 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 100 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 45 | 25 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 55 | 40-70 |
| இராசவள்ளி | 200 | 120 | 130 | 150 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 100 | 200 |
| முள்ளங்கி | 50 | 40 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 50 | 35 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | 110 | 100 |




# கழுதைக்கும் கற்பூர வாசனை தெரியும்



எலே இந்த கழுதையை ஏமாத்தனும்னு நினைக்கிறானா? பிச்சுப்புடுவேன் பிச்சு. நீ போய் அவனை இழுத்தாம்லே, பணத்தை வாங்கிட்டு இந்தா அந்தான்னுட்டு இழுத்துட்டு திரியறான். பேசுன பேச்சு பிரகார நடக்காத பய, அவனையெல்லாம் இழுத்து வச்சு கடினமான வார்த்தைகளை வீசினார்.

அண்ணாச்சியின் வசவுகள் எனக்கு புதிதல்ல. நான் அவரிடம் கணக்கு புள்ளையாக வேலைக்குச் சேர்ந்து ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. இந்த ஐந்து வருடங்களில் அவருடைய குணநலன்கள் எனக்கு அத்துப்படி. தொழிலில் கறார். ஒப்பந்த தொழில்களின் நெளிவு சுழிவுகளை, விரல் நுனியில் வைத்திருப்பார். யார் யாரை எங்கு பிடித்தால் வேலை நடக்கும் என்பதை தெரிந்து வைத்திருப்பார். இந்தக் கட்டட வேலைக்கு தரை கடினமாக இருப்பதால் "டிரில்லிங்க்" முறையில் துளையிட்டு வேலை செய்ய வேண்டும். இந்த வேலைக்கு நன்கு தெரிந்தவர்கள் செய்தால் வேலை வேகமாகவும் விரைவிலும் நடக்கும். அதற்காக இந்த மாதிரி வேலை செய்பவர்களுக்கு மேஸ்திரி போன்று ஒருவன் இருப்பான். அவனிடம் அண்ணாச்சி பதினைந்தாயிரம் அட்வான்ஸ் ஆக கொடுத்திருந்தார். நாளையே வேலை தொடங்குவதாக கூறிச்சென்றவன் இரண்டு மூன்று நாட்களாக போக்குக் காட்டிக்கொண்டிருக்கிறான்.

பொதுவாக இந்த மாதிரி பெரிய முதலாளிகளிடம் அட்வான்ஸ் வாங்கிவிட்டால் இழுத்தடிக்க மாட்டார்கள். அதுவும் அண்ணாச்சி போன்றவர்களிடம் இப்படி செய்வது என்பது பெரிய ஆச்சர்யம்தான். என்னுடைய அனுபவத்தின்படி அவரை விட்டு விட்டு நாம் தள்ளிச் சென்று விடவேண்டும். அவரது கோபம் தானாக அடங்கிவிடும்.

எப்படியோ அண்ணாச்சியின் ஆட்கள் அவனை பிடித்துக்கொண்டு வந்து விட்டார்கள். கூறு கெட்ட பயலே, ஆளைக் கூட்டிட்டு வர்றேன்னு பதினைஞ்சாயிரம் வாங்கிட்டுப் போன, இந்தக்கழுதைய ஏமாத்தணும்னு நினைச்சிட்டியா? இந்த கழுதையை ஏமாத்திட்டு எங்கடா நீ ஓட முடியும்? நாளைக்காலையில் நீ ஆளுங்களோட வர்றே? ஏமாத்த நினைச்சியோ உன்னை எங்கிருந்தாலும் புடுச்சி இழுத்துட்டு வந்து மரத்துல கட்டி வச்சு தோலை உறிச்சுடுவேன். நாளைக்கு கண்டிப்பா வந்துடறேன். அவன் விட்டால் போதுமென ஓட்டம் பிடித்தான்.

அண்ணாச்சி செய்தாலும் செய்வார். அவரை பொறுத்த வரை வேலை செய்பவனுக்கு கூலி தாராளமாய்தருவார். ஆனால் ஏமாற்றினான் என்று தெரிந்தால் முடிந்தவரை அவனை விலக்கி விட முயற்சிப்பார். 'சாம' 'பேத' 'தான' தண்டம் என்பது போல கடைசி ஆயுதத்தை இறுதியில் தான் எடுப்பார். அதைப்பார்த்த அனுபவமும் எனக்கு உண்டு. ஒருவனை கட்டி வைத்து அடித்ததையும் அதன் பின் அவனுக்கு உடல் நிலை சரியாகும் வரை இவர்தான் சோறு போட்டார். என்பதும் வேறு விடயம். அந்த ஊழியர்களுக்கு அண்ணாச்சி கண்டிப்பான தகப்பன், முதலாளி எல்லாம்.

அவர்தன்னை கழுதை கழுதை என சொல்லிக்கொள்வதற்கு கூட ஒரு கதை உண்டு. திருநெல்வேலி அம்பா சமுத்திரத்தில் உள்ள பள்ளியில் இவரை படிக்க வைக்க இவர் அப்பா படாத பாடுபட்டுக் கொண்டிருக்க வாத்தியார் ஒரு நாள் வேடிக்கையாக நீ 'கழுதையாட்டம்ல', அதுக்குத்தான் கற்பூர வாசனை தெரியாது. ஆனா நல்லா உழைக்கும்டே நீ உங்கப்பனுக்கு நல்லா உழைச்சுப்போடத்தான் லாயக்கு. ஆனா படிக்கிற விடயம் உனக்கு கற்பூர வாசம்தான்லே' என்று கிண்டலடித்திருக்கிறார். அதைக்கேட்டு ரோசப்பட்டு எழுந்த அண்ணாச்சி ஆமா சேர், நான் கழுதைதான், எனக்கு படிக்கிற வாசம்னா என்னான்னு தெரியாது என்று சொல்லி விட்டு வந்தவர் தான். அதற்குப் பின் அவர் அப்பா எவ்வளவோ சொல்லியும் பள்ளிக்குப் போக மறுத்து விட்டார்.

கொஞ்சம் பணம் கொடு நான் அசலூர்ல போய் புழச்சுக் காட்டறேன் என்று இங்கு வந்தவர் தான், கல்லுடைத்து, மண் சுமந்து பின் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி இன்று பெரிய ஒப்பந்தக்காரார் ஆகிவிட்டார். இருந்தாலும் அவருக்குப் படிப்பு வரவில்லை என்பது ஒரு குறையாகவே தெரிந்ததால் தன்னை 'கழுதை' 'கழுதை' என்று சொல்லி தன் ஆற்றாமையை தீர்த்துக்கொள்வார்.

மறுநாள் வேலை செய்ய ஆட்கள் எல்லோரும் வந்து விட்டார்கள். அண்ணாச்சியும் வந்து உட்கார்ந்திருந்தார். நான், மேஸ்திரி இருவரும் இவருடைய மனநிலை குறித்த பயத்தில் இருந்தோம். நேரம் ஆக ஆக இவர் முகம் செம்மை படர ஆரம்பித்தது. தூரத்தில் ஒரு பெண் ஓட்டமும் நடையுமாக வருவது தெரிந்தது. விறுவிறுவென வந்தவள் உட்கார்ந்திருந்த அண்ணாச்சியின் கால்களில் விழுந்து ஐயா, என் வீட்டுக்காரரை மன்னிச்சிடுங்கையா. இவள் விழுந்ததைக்கண்ட அண்ணாச்சி சடாரென எழுந்து தள்ளிப்போய் முகத்தை திருப்பி நின்று கொண்டார்.

உன் புருசனுக்கு நீ வக்காளத்து வாங்கிட்டு வந்திருக்கியா? அவன் உன்னை விட்டு ஒளிஞ்சுகிட்டானா? எச்சக்கலை என்று கெட்ட வார்த்தைகளை வீசினார். ஐயா என் வீட்டுக்காரர் செஞ்சது தப்புத்தாங்கய்யா, எங்களுக்கு வேற வழி தெரியலையா? நீங்க கொடுத்த பணத்தை எங்க பொண்ணுக்கு பரீட்சைக்கு கடைசி நாளுங்கிறதுன்னால அப்படியே கொண்டு போய் கட்டிட்டம்யா. ஒரு வாரம் டைம் கொடுங்கய்யா அது வரைக்கும் நானும் என் புருீசனும் இங்கேயே வேலை செய்யறோம்யா, எங்களை ஒண்ணும் செஞ்சுடா தீங்கய்யா.

இப்ப என் முன்னாடி வந்து நிக்காத, போயிடு அண்ணாச்சியின் குரல் உயரத்தொடங்க, அவர் சுபாவம் தெரிந்த நான் அந்த பெண்ணிடம் இப்ப நீ கிளம்பு என்று கிளப்பி விட்டேன். அவள் திரும்பி திரும்பி பார்த்துக்கொண்டே சென்றாள்.


ஐந்து நிமிடங்கள் ஓடியது. அண்ணாச்சி மெல்ல மேஸ்திரியிடம் திரும்பி நம்ம சுப்பனையும் சண்முகத்தையும் 'டிரில்லிங்' வேலைக்கு கூட்டி வரச் சொல்லிடுங்க, அப்புறம் இந்த பெண்ணையும் அவள் புருசனையும் வேலைக்கு வர வேணாமுன்னு சொல்லிடுங்க, ஒரு வாரம், இல்லை ஒரு மாசம் ஆனாலும் பணத்தை விரட்டி வாங்கிடுங்க.

ஏன்னா படிப்புக்குத்தான்னாலும் அடுத்தவன் பணத்தை எடுத்து கொடுத்தது தப்புன்னு அப்பத்தான் அவனுக்குப் புரியும்.

"படிப்பு" என்றவுடன் அவர் கோபம் தணிந்திருந்ததையும் ஆனாலும் படிப்பு என்றாலும் தவறு தவறுதான் என்ற அவரின் கருத்து எனக்கு ஒரு பழமொழியை மாற்றிச் சொல்ல தோன்றியது.

"கழுதைக்கும் தெரியும் கற்பூர வாசனை"

## வழிகாட்டுங்கள்



## பழமொழிகள்

- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அகல் வட்டம் பகல் மழை.
- அந்தி மழை அழுதாலும் விடாது.
- அறக்கப் பறக்க பாடுபட்டாலும் படுக்கப் பாயில்லை.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
- ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலம் தரும்.
- ஆள் கொஞ்சமானாலும் ஆயுதம் மிடுக்கு.
- ஆறு போவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு.

## விடுகதைகளும் விடைகளும்

- நடுவே இருக்கும் கறுப்பனுக்கு நாலு புறமும் வெள்ளையர் காவல்.
  சிலேட்டு
- குட்டைக் குட்டைச் சீமாட்டி. குளித்துக் குளித்துக் கரை ஏறுகிறாள்.
  வாளி
- குற்றம் இல்லாமலே குடுமியைப் பிடிக்கிறான்.
  சவரத் தொழிலாளி
- நான் அவனைச் சுமக்கிறேன். அவன் என்னைச் சுமக்கிறான்,
  செருப்பு
- விதை இல்லாமல் விளைவது எது? வெட்டில்லாமல் சாகுமே அது.
  வாழை
- என்னைப் பார்த்தால், உன்னைப் பார்ப்பேன்.
  கண்ணாடி
- பால் இல்லாமல் பருப்பான் நோய் இல்லாமல் இளைப்பான்.
  நிலா
- தேடாமலே கிடைக்கும் - அது தேடும் செல்வத்தைக் குறைக்கும்.
  சோம்பல்

நிச்சயமாக நன்மை விளையும்
என உணர்ந்தாலன்றி உள்ளத்தில்
உள்ளதை வெளியிடாதே — யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளக விசாரணையை தீர்மானிப்பது நீங்கள் மட்டுமா?

சர்வதேச விசாரணையை ஏற்க முடியாது என்றும் இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்கின்றோம் என்றும் இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அறிவித்திருந்தது.

தவிர, உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் இலங்கையின் அறிவிப்பு இருந்தது.

இந்த அறிவிப்புத் தொடர்பில், பதிலளித்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்; போர்க்குற்றம் தொடர்பான இலங்கையின் உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இவை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நிகழ்வில் நடந்தவை.

இலங்கை அரசின் மேற்போந்த அறிவிப்பும் அதற்கு ஆணையாளர் விடுத்த பதிலும் இவற்றின் முடிவுகள் என்னவாக அமையும் என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆனால் நாம் இங்கு கேட்பதெல்லாம் இலங்கையில் நடந்த போர்க்குற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்.

வன்னியில் நடந்த கொடும் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழக்க வேண்டியதாக இருந்தது.

இதற்கு மேலாக, படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருக்கையில்,

இணை அனுசரணையில் இருந்து விலகுவது என இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் இணை அனுசரணைக்கு உடன்பட்ட அதே அரசாங்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்த நிலையில், இணை அனுசரணையில் இருந்து விலகுகிறோம் என்று அறிவிக்குமாயின் இதைவிட்ட சிறுமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றக் கால அவகாசம் தேவை என்று கூறி காலம் கடத்தி ஐ.நா மனித உரிமைகள் பேரவையை ஏமாற்றிவிட்டு,

இப்போது எதுவும் செய்ய முடியாது என்று அறிவிப்பதானது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுகின்ற கடைத்தனமாகும்.

இவை ஒருபுறமிருக்க, உள்ளக விசாரணை முன்னெடுக்கப்படும் என்பதை இலங்கை அரசாங்கம் மட்டும் தனித்து தீர்மானிக்க முடியுமா என்பதுதான் நம் கேள்வி.

அதாவது போர்க்குற்றம் இழைக்கப்பட்டதான குற்றச்சாட்டு இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ளது.

போர்க்குற்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். இங்கு நாடு ஒன்றாக இருப்பினும் அரசாங்கம் பெரும்பான்மை சிங்கள இனம் சார்ந்து உள்ளது.

சிறுபான்மை மக்களாகத் தமிழ் மக்கள் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், குற்றம் புரிந்தவரே விசாரணையை முன்னெடுப்பதானது எந்த வகையிலும் ஏற்புடையதாகாது.

ஆக, போர்க்குற்றத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே; தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான விசாரணை எது என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் என்பதால், தமிழ் மக்களின் கருத்துக்களைப் புறந்தள்ளி எந்த முடிவையும் எவரும் எடுக்க முடியாது.

# உயர் செயற்திறன் மிக்க அரச நிறுவனங்களுக்கு

## ஜனாதிபதியால் விருது வழங்கி வைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அரச கணக்காய்வு குழு 2018ஆம் ஆண்டுக்கான நிதிக்கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய செயற்படுதல் தொடர்பான உயர் தரத்திலான பெறுபேற்றை வெளிக்காட்டிய நிறுவனங்களை பாராட்டும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நேற்று முற்பகல் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

அரச கணக்காய்வு குழு 2018ஆம் ஆண்டில் அரச, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் 844 ஐ மதிப்பீடு செய்துள்ளது.

அதில் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்கள் 109க்கு விருதுகள் வழங்கப்பட்டன. 55 நிறுவனங்கள் தங்க விருதுகளையும், 23 நிறுவனங்கள் வெள்ளி விருதுகளையுழ் மற்றும் 31 நிறுவனங்கள் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டன.

திறமைகளை வெளிக்காட்டிய நிறுவனங்களுக்கு தங்க விருது ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டது.

அரச கணக்காய்வு குழுவின் நோக்கம், அரச ஊழியர்களை சட்டத்தினால் கட்டி வைப்பதல்ல என்று நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார். எதிர்காலத்தில் பாராளுமன்றத்தின் நிதி கண்காணிப்புக்கு உட்படும் அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய வகையில் மதிப்பீடு இடம்பெற வேண்டுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். முன் வைக் கப்படும் பிரச்சினைகளும் புதுப்பிக்கப்படுதல் வேண் டும்.

தனியார் துறையினர் தமது நிறுவனங்களை நிர்வகிக்கும்போது பின்பற்றப்படும் முறைமைகளை உதாரணமாகக் கொள்வதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதிசுட்டி க்காட்டினார்.

நிர்வாக ஆய்வுகளை துரிதப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. நாளாந்தம் ஜனாதிபதி அலுவலகத்தின் முன்னால் அரச நிறுவனங்க ளின் பல்வேறு போராட்டக் குழுக்கள் வருகின்றன.

இதனால் தமது கொள்கையை செயற்படுத்துவதற்கு பதிலாக போராட்டக்காரர்களுக்காக அதிக நேரத்தை செலவிட வேண்டிய நிலை ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இறுதியில் போராட்டக் குழுக்களுக்கான தீர்வை வழங்கும் பொறுப்பை குறித்த அமைச்சுக்கள் பொறுப்பேற்க வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மக்கள் நிதி தொடர்பாக பூரண அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. சில அரச நிறுவனங்களில் இடம்பெறுகின்ற நிதி மோசடிகள் தொடர்பாக ஊகங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பாராளுமன்றம் அனுமதித்த செலவுகளை மீறி கொடுக்கல் வாங்கலில் மோசடிகள் இடம் பெறும்போது அரச சொத் துக்கள் பாதுகாப்பாக உள்ளதா என தெளிவுபடுத்தும் முக்கியமான பொறுப்பு அரச கணக்காய்வு குழுவுக்கு உள்ளதென ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அரச கணக்காய்வு குழுவின் தலைவர் இரா ஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாராளுமன்ற உறுப்பினர்களர்ன சிசிர ஜயக் கொடி, துலிப் விஜேசேகர மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தச நாயக்க, கணக்காய்வாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட திணைக்கள பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம)

## நுண் கடன்களால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பலருடைய வாழ்க்கையை நுண் கடன்கள் கேள்விக்குறியாகியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நுண் கடன்களைப் பெற்றவர் களிடமிருந்து அவற்றை மீளப்பெறாது நிறுத்துமாறும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களை ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவருமாறும் அவர் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், "நாட்டு மக்களின் ஜீவனோபாயம் பாதிப்புக்குள்ளா கியுள்ளது. அவர்களால் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நுண்கடன் திட்டத்தின் காரணமாகவும் இலட்சக் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பலருடைய வாழ்க்கை கேள் விக்குறியாகியுள்ளது. அவர்கள் கடன் சுமையைத் தாங்க இயலாது தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ள ப்பட்டுள்ளனர்.

ஆகவே , இந்தக் கடனை மீளப் பெறாதிருப் பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடி யாக மேற்கொள்ள வேண் டும். ஏனெனில் இந்தக் கடன் திட்டத்தின் காரண மாக குடும்பங்கள், குடும்பப் பொருளாதாரப் பிரச்சினையை எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

வறிய குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான சலுகைத் திட்டங்களை அரசாங்கம் உடனடியாக மேற் கொள்ள வேண்டும். கூட்டுறவு முறைமையின் ஊடாக குறை ந்த பட்ச சலுகைகளையே னும் அரசாங்கம் வழங்க வேண்டும். அத்துடன், கடன் வழங்கும் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்களை உறுதிப்படுத்துவது டன், கடன் பெறு னர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியதும் அவசியமானதாகும் என்றார். (ம)

## 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனம் வழங்கும் பணிகள் ஆரம்பம்

### உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வ்ழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் உயர் கல்வி அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பில் அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

அரசதுறையில் தொழில் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நியமனக் கடிதங்களை வழங்கும் நடவடிக்கை ஜனாதிபதி செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடிதங்களின் பிரதிகள் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப் பப் படுகின் றன. அனைத்து பட்டதாரிகளுக்கும் மார்ச் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 2021 மார்ச் 1ஆம் திகதி வரையில் பயிற்சிகள் வழங்கப்படும். இக் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு 20,000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

இதன் பின்னர் அரச சேவை பயனுள்ளதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் முன் னெடுப் பதற் காக சேவை நிலையங்களில் இவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

இந்த நியமனத்தில் இவர்கள் 5 வருட காலம் பணியாற்ற வேண்டும் என்றார். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மாவின் பிரதிபலிப்பு



இடைவிடாமல் மனதை ஒடுக்கும் பயிற்சியின் ஆற்றலால் பழைய, தீய செயல்கள் அழிகின்றன. இறுதியாக நல்ல செயல்களும் அழிந்து போகின்றன. நல்ல செயல்களும் அழிந்து போகின்றன. நல்ல செயல்களும் தீய செயல்களும் ஒன்றையொன்று அடக்கிவிடுகின்றன.

பின்னர் ஆன்மா மட்டும் நன்மை மற்றும் தீமைகளால் கட்டுப்படாததாய், எங்கும் நிறைந்ததாய், எல்லாம் வல்லதாய் எல்லாம் அறிந்ததாய் சுய ஒளியில் மிளர்கிறது.

அப்போதுதான் மனிதன் தனக்குப் பிறப்பு- இறப்பு எதுவும் இல்லை. விண்ணுலகோ, மண்ணுலகோ எதுவும் வேண்டியதில்லை என்பதை அறிகிறான். தான் பிறந்ததும் இல்லை. இறக்கப் போவதும் இல்லை. எல்லாம் இயற்கையின் விளையாட்டு. அது ஆன்மாவில் பிரதிபலித்தது என்பதை அறிகிறான்.

கண்ணாடியில் பிரதிபலிக்கும் ஒளி சுவரில் நகருகிறது. ஆனால் சுவரோ முட்டாள்தனமாகத் தானே நகர்வதாக நினைக்கிறது.நம் விடயமும் அவ்வாறே.

சித்தம் தான் பல்வேறு உருவங்களாகி ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. நாமோ இந்த உருவங்கள் எல்லாம் நாமே என்று நினைக்கிறோம்.

இந்த மயக்கங்கள் எல்லாம் மறைந்துவிடும். அந்த சுதந்திர ஆன்மா கட்டளையிடும் போது... ஆம், அது பிரார்த்திக்க வேண்டியதில்லை. அது கட்டளையிடுகின்ற அந்தக் கணமே அதன் விருப்பங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நினைத்ததை எல்லாம் அதனால் செய்ய முடியும்.

# வடமராட்சி கல்வி வலய கரப்பந்தாட்டம்
## பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க.சம்பியன்





வடமராட்சி கல்வி வலய கரப்பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை இரு பிரிவுகளில் சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை றோமன் கத்தோ லிக்க பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து வல்வை மகளிர் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி 25:16, 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினர்.

18 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை றோமன் கத்தோ லிக்க பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது.

ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி 25:10, 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)







கிளிநொச்சி தருமபுரம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 27 ஆம் திகதி பாடசாலை முதல்வர் திருமதி கந்தசாமி இந்திரா காந்தி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (க-316)

# மன்னார் உதைபந்தாட்ட பிறீமியர் லீக்; மன்னார் லயன்ஸ் அணி அபார வெற்றி



மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 5 ஆம் நாள் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த உதைபந்தாட்ட போட்டியானது ஈடன் உதைபந்தாட்ட கழகத்திற்கும், மன்னார் லயன்ஸ் உதைபந்தாட்ட கழகத்திற்கும் இடையில் போட்டி இடம் பெற்றது.

முதலில் போட்டி ஆரம்பமாகி 4.49 ஆவது நிமிடங்களில் மன்னார் லயன்ஸ் உதைபந்தாட்ட கழக வீரர், ஏ.பி.சி.ஏ.றோச் 2 கோல்களையும் 10 ஆவது நிமிடத்தில் ரி.ராஜ்கமல் மேலும் ஒரு கோலையும் 40 ஆவது நிமிடத்தில் ஏ.ஜே.மாக்கஸ் ஒரு கோலையும் 53 ஆவது நிமிடத்தில் பி.றோட்னி ஒரு கோலையும் அடித்தனர்.

அதே நேரம் ஈடன் உதைபந்தாட்ட கழக வீரரான ஏ.லக்ஸன் 85 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை அடித்தார்.

இந்த நிலையில் மன்னார் லயன்ஸ் உதைபந்தாட்ட கழகம் 5:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-285)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# 101 ஆவது விழா ஆரம்பம்

அரியாலை மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 101 ஆவது விழா ஆரம்பமாகிறது.

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட விழாவின் 101 ஆவது விழா முன்னோடி நிகழ்வுகளில் இன்று 29.02.2020 சனி பி.ப 4 மணி பெண் கெந்தியடி நடைபெறும். நாளை 01.03.2020 ஞாயிறு காலை 8.30 இற்கு ஆண்களுக்கான கெந்தியடியும் பி.ப 3 மணிக்கு பெணகளுக்கான கிளித்தட்டும் நடைபெறும். (ம)





தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் மோதும் வீரர்களின் போர் கிரிக்கெட் போட்டி நேற்று மகாஜனக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது. இப்போட்டிக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் செயலாளர் மொஹான் டி சில்வா வருகை தந்திருந்தார். அவருக்கான வரவேற்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிரிக்கெட் போட்டியையும் கண்டுகளித்தார். (க-105)

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2783 | வர்ணம் கரு நீலம் | திகதி 28.02.2020
வெற்றி இலக்கங்கள்
01 20 39 57 தனுசு
SUSUKI BALENO வாகனத்தை வெற்றிகொள்வதற்கான விசேட இல.
சுப்பர் தன யோகம்
8744718
2 மோட்டார் சைக்கிள்களை வெற்றிகொள்வதற்கான விசேட இல.
4105621
9431067
ரூ. 100,000 பரிசை வெற்றிகொள்வதற்கான இல.
758733
ரூ.500 பரிசுக்காக 8932
ரூ.100 பரிசுக்காக 965
விசேட இல.
சனிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ. 2,000,000/-
2020.02.15ம் திகதி சனிக்கிழமை இனம் நீல நிற டிக்கட்டுகளாகும். வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## சர்வதேச...

சாங்கத்தின் முடிவு நீதித் துறையினதும் ஏனைய ஆணைக்குழுக்களினதும் சுதந்திரத்தை பாதிக்கும், இலங்கை அரசாங்கம் காணாமல் போனோர் குறித்த அலுவலக சட்டம் குறித்து மீள் பரிசீலனை செய்கின்றது இதேபோன்று சர்வதேச சட்டங்களின் அடிப் படையில் விசாரணைகளை மேற்கொள்ளாமல் காணா மல் போனவர்கள் குறித்து ஜனாதிபதி சமீபத்தில் வெளி யிட்டுள்ள ஈவிரக்கமற்ற கருத்து காணாமல் போன வர்களின் குடும்பத்தினருக்கு மேலும் துயரத்தை அளித் துள்ளது எனவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித் துள்ளன. சர்வதேச சட்டங்களை மீறியதாக இலங்கைதொடர்பான அறிக்கையில் குற்றம்சாட்டப்பட் டுள்ள அதிகாரிகளிற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டமை குறித்த மனித உரிமை ஆணையாளரின் கரி சனையை நாங்களும் பகிர்ந்து கொள்கின்றோம் என 8 அமைப்பு கள் தெரிவித்துள்ளன.

2019 நவம்பர் முதல் அரசசார் பற்ற அமைப்புகளை கண்காணிக் கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச் சிற்கு வழங்கப்பட்டுள்ளது.இதன் மூலம் அவர்களின் கண்காணிப்பு ஆபத்து அதிகரித்துள்ளது.பல மனித உரிமை அமைப்புகளிற்கும் ஊடகங்களிற்கும் பாதுகாப்பு மற் றும் புலனாய்வு துறை அதிகாரிகள் அச்சுறுத்தும் விஜயங்களை மேற் கொண்டுள்ளனர், பத்திரிகையாளர் களிற்கு எதிரான மரண அச்சுறுத் தல்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன் எனவும் சர்வதேச அமைப்புகள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளன.

இலங்கையில் மீண்டும் அச்ச சூழல் தோன்றியுள்ளது குறிப்பாக உண்மை நீதி பொறுப்புக்கூறலிற் காக குரல்கொடுப்பவர்களிற்கு அச்சசூழ்நிலை திரும்பியுள்ளது எனவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

ஐக்கியநாடுகள் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட தெளிவான கட்ட மைப்புகளை ஏற்றுநடக்கப்போவ தில்லை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதால் இலங்கையை சர்வதேச சட்டங்களின் கீழான அதன் கடப்பாடுகளின் அடிப்படையில் பொறுப் புறக்கூறலிற்கு உட்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனவும் சர்வதேச அமைப்புகள் தெரிவித் துள்ளன. (ம)

## மதுபானம்...

பானம் என்று நினைத்து அருந்திய முதியவர் ஒரு வர் முள்ளியவளை வைத் திய சாலையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்திய சாலைக்கு மாற் றப்பட்ட நிலையில் நேற் றைய தினம் சிகிச்சை பல னின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி கணேச புரத்தைச் சேர்ந்த ஏழுமலை நாகேஸ்வரன் வயது 62 என்பவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை யின் திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவா யம் பிறேம்குமார் மேற் கொண்டுள்ளார். (ம)

## ஐ.தே.க. செயற்...

ளிக்கிழமை மாலை சுமார் 2 மணித்தியாலங்களுக்கும் மேல் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடு வதற்கான நடவடிக்கைகள், சஜித் பிரேமதாச தலைமையிலான புதிய கூட்டணியின் சின்னம் என்பன தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.தே.க. தலை வர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச, பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களுக்கிடை யிலான கலந்துரையாடல்களின் பின்னர் எவ்வித இணக்கப்பாடு களும் இன்றி கூட்டம் நிறைவடைந் துள்ளது. (ம)

## இராணுவ ஆட்...

வதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் போக்குவரத்து சேவை யில் பொலிஸாருடன் இராணுவ பொலிஸாரும் இணைத்துக்கொண் டுள்ளமைக்கான நோக்கமென்ன? பல நெருக்கடிகளுக்கு மத்தியி லேயே பொலிஸார் வீதிப்போக்கு வரத்து சேவையில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இவ்வாறான நிலையில் இராணு வப்பொலிஸாரையும் சேவையில் இணைத்து அவர்களுக்கு மாத் திரம் விசேட சலுகைகளை வழங்கு வதனால் இருதரப்பினருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன் றும் வாய்ப்புக்கள் ஏற்படும்.

நாட்டில் இராணுவ ஆட்சி யினை ஏற்படுத்தும் நிலைப்பாட்டி லேயே அரசாங்கம் செயற்படுகின் றது. அதிலொரு அங்கமாகவே இச் செயற்பாட்டினைக் கருத முடி யும் என்றார். (ம)

## வவுனியாவில்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா ஓமந்தை அலகல்லு போட்டகுளம் பகுதியில் வசித்து வந்த அர்ச்சுனன் அருள்குமார் என்ற 26 வயதுடைய இளைஞன் நேற்று இரவு முதல் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் பல இடங்களில் அவரைத் தேடியபோதும் அவர் குறித்த தகவல்கள் எதுவும் கிடைக்க வில்லை.

இந்நிலையில் அவரது வீட்டு வளவிலுள்ள தோட்டக்கிணற்றி லிருந்து நேற்றுக் காலை தண்ணீர் இறைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள் ளப்பட்டபோது கிணற்றில் அவரது சடலம் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதுடன் இச்சம்பவம் குறித்து ஓமந்தை பொலிஸாருக்கும் அப் பகுதி கிராம அலுவலகருக்கும் தெரி விக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மரண விசாரணை அதிகாரிக்கு தகவல் வழங்கியுள்ள துடன் மேலதிக விசாரணைகளை யும் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த இளைஞன் மனநலம் குன்றிய நிலையில் சில காலங்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (ம-250.299)

## ஆர்ப்பாட்டத்...

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையை கேட்பதில் நேரம் போவதால், தேசிய கொள்ளைகள் மற்றும் இராஜதந்திர விவகாரங் கள் தொடர்பில் அவதானம் செலுத்து வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஆர்ப்பாட்ட பிரச்சினை களை அமைச்சுக்களின் செயலா ளர்கள் பொறுப்பேற்று கண்கா ணிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பாராளுமன்ற வளாகத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றி[illegible] கொண்டு உரை யாற்று[illegible] அவர் இவ்வாறு குறிப்பிட்[illegible].

கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகாமையில்அமைந்துள்ள ஜனாதி பதி செயலக வளாகத்தில் ஆர்ப்பாட் டக்காரர்களுக்கு என தனியான இடம் மொன்றை ஜனாதிபதி ஒதுக்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உலகநாடுகளின் முடிவுகள் கேள்...

இலங்கை தமிழ் மக்கள் சார் பாக ஜெனிவாவுக்குச் சென்றுள்ள அவர் அங்கிருந்து கருத்து வெளி யிடுகையிலேயே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், ஐக்கிய நாடு கள் சபை மாநாட்டிலே, ஏற்கனவே கொண்டுவரப்பட்டுள்ள 30/1, 40/1 தீர்மானங்களில் இருந்து விலகிக்கொள்வதாகவும் அதன் அனைத்து செயற்பாடுகளில் இருந் தும் ஒதுங்கிக் கொள்வதாகவும் இலங்கை அரசாங்கம் அறிவித்துள் ளது.

இது மிகவும் அபாயகரமான செய்தி. இலங்கையைப் பொறுத்த வரைக்கும் தாங்கள் புரிந்த போர்க் குற்றங்கள், மனிதப் படுகொலை கள் குறிப்பாக தமிழர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட இனப்படுகொலை களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறி நீதியை வழங்க வேண்டிய ஒரு காலகட்டம் இது என்று தெரிவித்துள்ளார். (ம)

## ஐ.நா.பாதுகாப்பு சபைக்கு பாரப்...

படல் வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை யின் 43வது கூட்டத் தொடரில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை மீதான பொது விவாதத் தில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

30/1 தீர்மானத்தை அமுல் படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நடத்தை குறித்து இந்த வாய்மொழி மூல அறிக்கை கணிப்பீட்டை மேற்கொண்டிருக் கிறது.

இந்த பிரேரணையின் உள்ள டக்கமானது , மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், மற்றும் நல்லிணக் கத்தை ஏற்படுத்தல் போன்ற விடயங்களில், இனப்படுகொலை யால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளோடு ஒப்பிடுகையில் மிகப்பாரிய குறைகளோடு இருந் தமையால், தமிழர்களால் இப் பிரேரணையானது சந்தேகத்துக் குரியதாகவே பார்க்கப்பட்ட போதி லும், இந்த 30/1 பிரேரணை யானது, இலங்கை அரசாங்கத்தி னால் இணை அனுசரணை வழங் கப்பட்டு, அது இந்த ஐ.நா மனித உரிமை சபையின் அங்கத்தவர் கள் பலராலும் பெரிதும் சிலாகிக் கப்பட்டும் இருந்தது.

இந்த பிரேரணையை அமுல் படுத்த முடியாது என அப்போதைய இலங்கை அரசாங்கம் வெளிப் படையாகவே மறுதலித்திருந்த போதிலும், தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் கால நீடிப்பு கொடுக் கப்பட்டிருந்த நிலையில் கடந்த நவம்பரில் இலங்கையில் புதிய அரசாங்கமொன்று பதவிக்கு வந் திருக்கிறது.

இங்கு இழைக்கப்பட்ட அனைத்து குற்றங்களுக்கும் பின்னணியில் இருந்த முக்கிய சூத்திரதாரி எனக் குற்றம் சாட்டப்பட்டிருப்பவரே இப் போது புதிய ஜனாதிபதியாக வந்தி ருக்கிறார்.

நீதியை நிலைநாட்ட மறுதலிக் கின்ற நாடொன்றில், குற்றவியல் நீதியை அமுல்படுத்துவதற்கான வல்லமைகள் இந்த மனித உரிமை பேரவைக்கு மிகவும் மட்டுப்படுத் தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது என்பதை ஏற்று, இப்போதாவது, இலங்கையை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றிற்கு பிரேரிப்பதற்கு அல்லது விசேட சர்வதேச தீர்ப்பாயம் ஒன்றை நிறுவுவதற்கான கோரிக்கை விடுக்கப்படவேண்டும் என்ற கோரிக் கையை முன்வைக்கிறேன் என தெரிவித்துள்ளார். (ம)

ஜயோதய
சீட்டிழுப்பு வாரம் 565
வர்ணம் பச்சை
திகதி 28/02 2020 வெள்ளிக்கிழமை
M 07 20 22 30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,666,680
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 897
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.02.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,164,240/-
வெற்றி இலக்கங்கள் 01 23 25 59 F

சம்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 327
சீட்டிழுப்பு திகதி 28.02.2020 சிகப்பு
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 07 17 66 | விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 52,639,036
2020/03/04ம் திகதி புதன் கிழமை நீலம் நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

மெகா பவர்
திகதி 28/02/2020
சீட்டிழுப்பு இலக்கம் 504
F 21 54 60 64 78

மஹஜன சம்பத
திகதி 2020/02/28
சீட்டிழுப்பு இலக்கம் 4124
Q 1 6 6 1 1 0

தன நிதானய
திகதி - 2020.02.28
சீட்டிழுப்பு இலக்கம் - 271
H 13 16 36 70

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 28-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2406
J 29 44 58 64

## J.THARSHAN'S ENGLISH ACADEMY

30 வகுப்புகளில் சரளமாக ஆங்கிலம் எழுத, வாசிக்க, கதைக்க 16 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
ஆங்கிலம் கதைப்பதற்கு 100% முழு உத்தரவாதம் (2417)
தொடர்புகளுக்கு:- 077 478 7007

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை.
யாழ்.நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- (C-9360)
0753305500, 0212215656

## பராமரிப்பாளர் தேவை

யாழ் நகரில் புதிதாக தொடங்கவிருக்கும் கல்லூரியில் துப்பரவாக்கல், பூந்தோட்ட பராமரிப்பு, அலுவலக பராமரிப்பு போன்ற வேலைகளை முழுநேரமாக செய்யக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.



சம்பளம் - 25'000/=
(C-9340)
தொடர்புகளுக்கு - 0768226243

## கல்லூரி நிர்வாக உத்தியோகத்தர்

யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்வதேச தரத்திலான கற்கை நெறிகளை வழங்கும் கல்லூரிக்கு அனைத்து பொறுப்புக்களையும் ஒருங்கமைக்கக்கூடிய முழுநேர நிர்வாக உத்தியோகத்தர் தகமைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (C-9340)



✻ஆங்கிலத்தில் புலமை, பல்கலைக்கழக கல்வி வேலை அனுபவம் என்பன அடிப்படை தகுதிகளாக கருதப்படும்.
சம்பளம் - 30'000/=
தொடர்புகளுக்கு - 0768226243

## திருவருள்மிகு குருநாத சுவாமி கோயில்

தெல்லிப்பழை
திருப்பணிச் சபை

## விஷேட பொதுக்கூட்டம்

காலம் : 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 3.30 மணி
இடம் : கோயில் மண்டபம்

மேற்படி ஆலய திருப்பணிச்சபையின் விஷேட பொதுக்கூட்டத்தில் ஆலயத்தில் நடைபெறுகின்ற திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட உள்ளதால் உபயகாரர்கள், குருநாதனடியார்கள், அன்பர்கள், அபிமானி ...னைவரும் சமுகத்தந்து குருநாத சுவாமியின் பேரருளைப் ...ய்யுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி
செயலாளர்
(2407)


# இணை அனுசரணையிலிருந்து விலகல்
# இலங்கை அரசின் தீர்மானத்துக்கு பல அமைப்புக்கள் கண்டனம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களுக்கு வழங்கிய இணை அனுசரணையில் இருந்து விலகும் இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் சில அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் ஆணையமும் கவலை வெளியிட்டுள்ளது.

இராணுவம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சட்டத்திற்கிணங்க குற்றங்களாக கருதப்படும் நடவடிக்கைகளை வெளிக்கொணர இலங்கை நீதித்துறை மற்றும் சட்ட நிறுவனங்கள் நீண்டகால இயலாமையை வெளிப்படுத்தியுள்ளதாக ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

பொறுப்புக்கூறலில் இருந்து இராணுவத்தை பாதுகாப்பதுடன், சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் முக்கிய பதவிகளில் அமர்த்த புதிய ஜனாதிபதி உறுதியளித்துள்ளமை நிலைமையை மேலும் மோசமாக்குவதாக சர்வதேச நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மறுக்கும் நல்லிணக்கத்தை தமிழ் மக்கள் மறுதலிப்பதாகவும் ஆணையம் கூறியுள்ளது.

இலங்கை தமிழ் மக்களுக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளதாக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான இயக்கம் தெரிவித்துள்ளது.

உண்மை; நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யவில்லையெனவும் குறித்த இயக்கம் கூறியுள்ளது. . (ம)


## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



UK - 550*/= Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=



சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9293)

## அதிர்ஷ்ட இலாப முடிவுகள்

நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகத்தின் எதிர்கால சமூக சேவை அர்ப்பணிப்பு நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பானது 23.02.2020 அன்று மாலை 3.00 மணியளவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டுள்ளது. எனவே கீழே குறிப்பிட்ட அதிர்ஷ்ட எண்ணை உடைய அதிர்ஷ்டசாலிகள் தங்களிடம் உள்ள அதிர்ஷ்டலாப ரிக்கற்றுடனும் தங்களுடைய தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 01.03.2020ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்துக்கு (TCT) வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெற்றியாளர்களின் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் பரிசு தொலைக்காட்சிப் பெட்டி | 0165 |
| இரண்டாம் பரிசு தொலைபேசி | 2632 |
| மூன்றாம் பரிசு மின்விசிறி | 2207 |

ஆறுதல் பரிசு பெறுவோர்
1758, 4131, 2821, 0341
தொடர்புகளுக்கு:- 077 439 4897
(C-9367)

## கட்டுமானப் பொருட்கள் விநியோகம்

1. மணல் வகை - கட்டுமணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன், நைஸ்)
2. சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3. கண்டல் வகை - 9"x6" கருங்கல், 9"x6" வெள்ளைக்கல் (காட்டுக்கல்)
4. டஸ்ட் - கருங்கல் டஸ்ட், வெள்ளைக்கல் டஸ்ட், கொங்கிறீற் கற்கள் வகைகள், பூக்கல், தளம் மற்றும் நிலப்பதிவுகல், கொங்கிறீற் வேலி, தூண் வகைகள் ஆகியவை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். (2333)

தொடர்புகளுக்கு:- 0773713000/0760964460

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மெய்யியற் துறையில் உளவியல் மற்றும் மெய்யியல் கற்கைநெறிகளில் பட்டம் பெற்ற பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 01.03.2020 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபம் இல. 308இல் நடைபெறும். அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மெய்யியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(2415)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 11 - 10 - 1937
மறைவு 31 - 01 - 2020

அமரர் வைரமுத்து
### கந்தையா பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற முன்னாள் ஹாட்லி கல்லூரி ஆசிரியர்)

கடந்த 31.01.2020 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வைரமுத்து கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 01.03.2020 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் 11.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் இருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப்பிரசுரம், பதாகை வாயிலாகவும், மலர் வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் மற்றும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வெஸ்லி லேன்,
கல்லூரி வீதி, பருத்தித்துறை.
தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 0771644274, 0772208410

Rotaract Nallur Heritage
ROTARACTSL 50 1969 | 2019

இலங்கை றோட்டறக்ட் மாவட்டத்தினுடைய 50ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
Capital TV, Capital Fmஇன் ஊடக அனுசரணையுடன்
நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடாத்தும்

## மாபெரும் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி - 2020

காலம் : 15.03.2020
நேரம் : காலை 6.30 மணிக்கு
இடம் : நல்லூர் ஆலய முன்றல்
பதிவுக் கட்டணம் : 500 ரூபாய்
(விண்ணப்ப முடிவுத்திகதி : 10.03.2020)

1ம் பரிசு : 20000 ரூபாய்
2ம் பரிசு : 15000 ரூபாய்
3ம் பரிசு : 10000 ரூபாய்
மேலும் 7 ஆறுதல் பரிசுகள்

மட்டுப்படுத்தப்பட்ட 50KMவரையிலான போட்டி

தொடர்புகளுக்கு : 0762571141 / 0770759511


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.